தமிழறிவு

5

TECA

மேலைநாட்டுத் தமிழ்ப் பாடசாலைகள் ஒன்றியம்

Western Tamil Schools Federation

"கற்க கசடறக் கற்க"

தமிழறிவு

பாடநூலும் செயல்நூலும்

5

மேலை நாட்டுத் தமிழ்ப் பாடசாலைகள் ஒன்றியம்
Western Tamil Schools Federation

தமிழறிவு பாடநூலும் செயல்நூலும் ⑤
THAMILARIVU - 5

பதிப்புரிமை: மேலை நாட்டுத் தமிழ்ப் பாடசாலைகள் ஒன்றியம் /
Western Tamil Schools Federation
TECA, 72, Warlingham Road, Surrey, CR7 7DE

மூன்றாம் பதிப்பு - ஐப்பசி 2008
அளவு: 172 x 245 mm

இணைப்பாளர் குழு:
திரு. யோசப் வில்வராஜ்
திரு.க.மனோகரன்
திரு.மு.து.செல்வராஜா

நூலாக்கக்குழுவினர்

திரு. தமிழ்மணி அரங்க முருகையன்
திரு. பொ.கனகசபாபதி
திரு. ம.செ.அலெக்சாந்தர்
திரு. கவிஞர் கந்தவனம்
திரு. மாசில் பிரான்சீஸ்
திரு. குரு அரவிந்தன்
திரு. க. சந்திரசேகரம்
திருமதி. விமலதாஸன்
திரு. க.ஜெகதீஸ்வரம்பிள்ளை
திரு.எஸ்.முருகையா
திரு.மு. து. செல்வராஜா
திரு.க.மனோகரன்
திருமதி ராதா குமாரநாயகம்
திருமதி கல்யாணி விக்னேஸ்வர ஐயர்
திருமதி ஜெயந்தி சிவராஜா
திரு. சாம் தயாளன்

அச்சுப்பதிப்பு: Unie Arts (Pvt) Ltd., 48B, Bloemendhal Road,Colombo 13.
Tel: +94 11 2330195

Copyright: All rights reserved.

பதிப்புரை

ஐக்கிய இராச்சியத்தின் கல்விப்பிரிவு (DCSF) பிற ஐரோப்பிய மொழிகளைப் போலத் தமிழ் மொழியையும் தமது சமூக மொழிகளுள் ஒன்றாக அங்கீகரித்துள்ளது. அதன் கட்டமைப்பில் தேசிய மொழி நிலையத்தினதும் (Asset Languages) நவீல்ட் ஸ்தாபனத்தினதும் (Nuffield Association) வளங்கள் கல்விப்பகுதியால் (DFES) ஆக்கப்பட்ட சமூகமொழிப் பாடத்திட்டத்திற்கு ஏற்புடைய தமிழ் மொழிப்பாட நூல்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் சமூகப் பணியில் ஈடுபடுவதில் மேற்குலகத் தமிழ் பாடசாலைகள் ஒன்றியம் (WTSF) பெருமை பெறுகிறது.

மேலைத்தேய நாடுகளில் வயது வேறுபாடு இன்றி தமிழ்மொழியில் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய திறன்களைப் பயிலவும், பாலர் பிரிவு முதல் பட்டதாரிப்பிரிவு வரையிலான Cambridge Asset Exam – OCR பரீட்சைகட்குத் தோற்றவும் தமிழறிவு நூல்கள் மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் உறுதுணையாக அமையும்.

இபபரீட்சைகள் பற்றிய மேலதிக விபரங்களை அறியவும் பதிவு செய்து கொள்ளவும் www.assettlanguage.org.uk எனும் இணையத்தளத்தையும், 1-Hill Road, Cambridge CB1 2EY எனும் முகவரியையும் தொடர்பு கொள்ளலாம்.

இப்பாட நூல்கள் மூலம் தமிழறிவைத் தரணி எங்கும் பரப்பும் பெரும் பணியில் தன்னலம் கருதாது தமது ஒத்துழைப்பை நல்கும் சான்றோர் யாவருக்கும் எமது உளங்கனிந்த நன்றி.

மேலை நாட்டுத் தமிழ்ப்பாடசாலைகள் ஒன்றியம்

FOREWORD

Tamil language has been accepted as one of the community languages in the United Kingdom by the Department of Children, Schools and Families (DCSF). The curriculum for teaching Tamil language and other community languages was published by The Department for Education and studies (DFES) with the guidance and resources from The ASSET examination Board and The Nuffield Foundation. The Western Tamil Schools Federation (WTSF) is proud to dedicate their service in Fulfilling the need of publishing the Tamil Text books suitable to the above curriculum and the Cambridge ASSET Examinations.

Conducted by the OCR the Cambridge ASSET Examinations are available to all Students irrespective of age from Preliminary level to Mastery level in listening, hearing, reading and writing. The Tamilarivu text books with the exercises will be an aid not only to the students but also to the parents and teachers involved in teaching the Tamil language in Western countries. The details of The Cambridge ASSET Examination for Tamil language are available from Cambridge Asset languages, 1- Hill road,Cambridge, CB1 2EU and the schools may register themselves as an examination centre with OCR visiting the website www.assetlanguages.org.uk.

Publishing the series of Tamilarivu was only possible because of the dedicated scholars and the enthusiastic well wishers and we thank them all for their encouragement and continuous support to spread the Tamil language all over the world.

WESTERN TAMIL SCHOOLS FEDERATION

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	எனது தமிழ்ப் பாடசாலை	07
2.	உறவுமுறைகள்	13
3.	புகழ்படைத்தோர்	20
4.	தமிழ்மொழி	26
5.	தமிழ்க் கவிதைகள்	31
6.	செய்யும் தொழிலே தெய்வம்	36
7.	வீடுகள்	40
8.	தைப்பொங்கல் விழா	44
9.	குடும்பமும் வீட்டுப் பொறுப்புகளும்	49
10.	கலாசார விழாக்கள்	54
11.	கடிதம்: தோழிக்குக் கடிதம்	61
12.	ஊடகங்கள்	66
13.	கதை : ஆடும் சிங்கமும்	70
14.	ஆறுவது சினம்	76
15.	பார்த்து இரசித்த விளையாட்டு விழா	83
16.	கதை: நண்டும் கொக்கும்	87
17.	சிலப்பதிகாரம்	92
18.	நன்றிகெட்ட முதலை	96
19.	கதை: கப்பல் பார்க்கப்போன சேவகன்	100
20.	ஒளவையின் அறிவுரை	104
20.	அடிப்படை இலக்கணம்	106

பாடம் - 1

எமது தமிழ்ப் பாடசாலை



எமது தமிழ்ப் பாடசாலை எனது வீட்டுக்கு அண்மையில் அமைந்துள்ளது. அங்கே தமிழ்மொழியும், வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், பரதநாட்டியம், சுரத்தட்டு என்ற நுண்கலைப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. நான் தமிழும், புல்லாங்குழலும் கற்கிறேன். எமது தமிழ்ப் பாடசாலையில் எனக்குப் பல தமிழ் நண்பர்கள் இருக்கிறார்கள். நான் தமிழ்ப் பாடசாலைக்குச் செல்லும்போது எமது கலாசார முறைப்படி ஆடைகள் அணிந்து செல்வேன். ஆசிரியர்களும் அப்படியான ஆடைகளைத்தான் அணிந்து வருவார்கள். தமிழிலே பல நல்ல கதைகளும், இனிமையான பாடல்களும் இருக்கின்றன. எனக்கு ஆத்திசூடியும், திருக்குறளும் மிகவும் விருப்பமானவை ஆகும். நான் தமிழ்ப்பாடல்களை ஆர்வத்துடன் விரும்பிக் கேட்பேன்.

நாம் எல்லோரும் வகுப்பிலே அன்பாகவும், ஒற்றுமையாகவும் இருக்கிறோம் பல பாடங்களைப் படிக்கிறோம். திருக்குறள் மனனப்போட்டி, பேச்சுப்போட்டி என்பன நடைபெறும். ஒவ்வொரு தவணையும் பரீட்சைகள் நடைபெறும். வருட இறுதியில் பரிசளிப்பு விழாவும், விளையாட்டுப் போட்டியும் நடைபெறும். எல்லா மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒன்றாக இணைந்து இவ்விழாக்களை நடத்துகிறார்கள். இவற்றைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். எமது தமிழ்மொழியையும், கலை கலாசாரத்தையும் நான் எனது தமிழ்ப் பாடசாலையில் கற்றுக்கொள்வதில் மிகவும் பெருமை அடைகிறேன்.

1. கேள்விகள்:-

(1). உமது தமிழ்ப் பாடசாலையின் பெயர் என்ன? .....

(2). உமது தலைமை ஆசிரியரின் பெயர் என்ன? .....

(3). உமது நெருங்கிய நண்பன் அல்லது தோழி யார்? .....

(4). நீர் உமது தமிழ்ப்பாடசாலையில் என்னென்ன பாடங்கள் படிக்கின்றீர்?

.....

(5). ஆத்திசூடியில் முதலிரண்டு வரிகளையும் எழுதுக.

.....

.....

(6). உமக்குத் தெரிந்த இரண்டு திருக்குறள்களை எழுதுக.

.....

.....

(7). உமக்கு கற்பிக்கப்படும் பாடங்கள் எவை?

.....

.....

(8). எப்படியான ஆடைகளை நீர் அணிந்து செல்வீர்?

.....

(9). பாடசாலையில் நடைபெறும் இரண்டு விழாக்களை எழுதுக.

.....

(10). நீர் தமிழ் கற்பதில் ஏன் பெருமை அடைகின்றீர் என எழுதவும்.

.....

2. வரவேற்பு முறைகள்:

பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.
(வணக்கம், கை குலுக்கி, நிலத்தில் வீழ்ந்து, கட்டிப்பிடித்து, முத்தமிட்டு, வாருங்கள்)

(1). கோயில்களில் ..... கடவுளை வணங்குவார்கள்.

(2). ஆங்கிலேயர் .....வரவேற்பார்கள்.

(3). சில நாட்டவர்கள் கன்னத்தில் .....வரவேற்பார்கள்.

(4). பல காலம் காணாத ஒருவரைக் கண்டவுடன் சிலர் .....
வரவேற்பார்கள்.

(5). எமது வீட்டிற்கு வரும் விருந்தாளிகளை வணக்கம் .....
என்று கூறி வரவேற்போம்.

(6). தமிழ் மக்கள் இரு கைகளையும் குவித்து ..... என்று கூறியும் வரவேற்பார்கள்.

3. எதிர்ச் சொற்கள் எழுதுக:

(1). நண்பன் - ..... (2). இனிப்பு - .....

(3). விருப்பு - ..... (4). ஒற்றுமை- .....

(5). இறுதி - ..... (6). மகிழ்ச்சி - .....

(7). பெருமை - ..... (8). முதல் - .....

(9). தெரிந்த -..... (10). பல - .....

(11). புத்திசாலி- ..... (12). வீரன் - .....

(13). நட்பு - ..... (14). பொதுநலம்- .....

(15). சரி - ..... (16). எடு - .....

(17). அகம் - ..... (18). ஏறு - .....

(19). நில் -..... (20). இரு - .....

4. ஒத்த கருத்துள்ள சொற்களை கீறிட்ட இடத்தில் எழுதுக:

(1). அரி - ..... (2). ஆடை - .....

(3). இறைவன் - ..... (4). ஈகை - .....

(5). உயர்வு - ..... (6). ஊக்கம் - .....

(7). எழில் - ..... (8). ஏறு - .....

(9). ஒளி - ..... (10). ஓசை - .....

(11). ஈதல் - ..... (12). சோகம் - .....

(13). தந்திரம் - ..... (14). குழந்தை- .....

(15). காடு - ..... (16). மகன் - .....

(17). மகள் - ..... (18). பூமி - .....

(19). புலவர் - ..... (20). தந்தை - .....

5. ஒரு சொல்லுக்கேற்ற பல சொற்கள்:

King	-	அரசன்	-	மன்னவன், வேந்தன், இராசா
Foot	-	அடி	-	பாதம், கால், அளவுகோல்
Danger	-	அபாயம்	-	ஆபத்து, இடையூறு, இடுக்கண்
Near	-	அண்மை	-	கிட்ட, சமீபம், அருகில்
Truth	-	உண்மை	-	சத்தியம், வாய்மை, மெய்
War	-	சண்டை	-	போர், யுத்தம், சமர்
Sea	-	கடல்	-	ஆழி, சாகரம், முந்நீர்
Jewel	-	ஆபரணம்	-	அணி, நகை, அணிகலன்
House	-	வீடு	-	இல்லம், மனை, அகம்
Snake	-	பாம்பு	-	அரவம், சர்ப்பம், நாகம்

வீட்டுவேலை

6. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல்லும் ஆங்கிலச் சொல்லும் எழுதுக:

		ஒத்த சொல்	ஆங்கிலம்
(1). ஆகாயம்	-	.....	.....
(2). ஆசிரியர்	-	.....	.....
(3). இன்பம்	-	.....	.....
(4). உடல்	-	.....	.....
(5). கடவுள்	-	.....	.....
(6). துயரம்	-	.....	.....
(7). பரிசு	-	.....	.....
(8). திங்கள்	-	.....	.....
(9). வரை	-	.....	.....
(10). நெருப்பு	-	.....	.....

7. பின்வரும் சொற்களில் உள்ள உயிர் எழுத்துக்களையும் மெய் எழுத்துக்களையும் எழுதுக:

அ. ஃது. அம்மா, தமிழ்ச்சொல், ஔவியம், இங்ஙனம், பேச்சுப்போட்டி, ஈசல், ஓட்டுநர், ஐயம், தாக்கம்

உயிரெழுத்து	**மெய்யெழுத்து**
.....	.....
.....	.....
.....	.....
.....	.....
.....	.....

8. தமிழில் எழுதுக:

(1). Aesthetic Subject - .....

(2). Friends - .....

(3). Culture - .....

(4). Stories - .....

(5). Subjects - .....

(6). Favourite Subjects - .....

(7). With love and peace - .....

(8). Term - .....

(9). Examination - .....

(10). Pride - .....

பாடம் - 2

உறவு முறைகள்

எனது பெயர் பிரியன். அம்மாவும் அப்பாவும் என்னை மகன் என்று அழைப்பார்கள். எனது அண்ணாவும், அக்காவும் என்னைத் "தம்பி" என்று அழைப்பார். எனது தங்கை குமுதினி என்னை "அண்ணா" என்று அழைப்பாள். எமது அம்மாவின் தம்பியை நாங்கள் "மாமா" என்று அழைப்போம். அதேபோல் அப்பாவின் தங்கையையும் "மாமி" என்று அழைப்போம். அம்மாவின் அக்காவைப் "பெரியம்மா" என்றும், அப்பாவின் தம்பியைச் "சித்தப்பா" என்றும் அழைப்போம். "இப்படித்தான் தமிழ் மக்கள் எல்லோரும் முறை சொல்லி அழைப்பார்கள்" என்று அம்மா கூறினார். ஆனால் இங்கிலாந்தில் வாழ்வோர் மாமாவையும், சித்தப்பாவையும் "Uncle" என்றுதான் அழைப்பார்கள். மாமா, மாமியின் பிள்ளைகள் எமக்கு மைத்துனர், மைத்துனிகள் என்ற முறை ஆகும்.

அம்மாவின் அம்மாவை "அம்மம்மா" என்றும், அப்பாவை தாத்தா அல்லது "அம்மப்பா" என்றும் அழைக்கிறோம். அப்பாவின் அம்மாவை "அப்பம்மா" என்றும், அப்பாவை தாத்தா என்று "அப்பப்பா" என்றும் அழைக்கிறோம். இவர்களைப் பாட்டா, பாட்டி அல்லது பேரன், பேத்தி என்றும் சிலர் அழைப்பார்கள். இவர்கள் எல்லோரும் என்னையும், அண்ணாவையும், தங்கையையும் தமது பேரப்பிள்ளைகள் என்று கூறி மகிழ்வதைப் பார்த்திருக்கிறேன். எங்கள் வீட்டில் சிலருடைய நிழற்படங்கள் இருக்கின்றன. அதில் இருப்பவர்கள் எமது பூட்டன், பூட்டிகள் என்று அம்மா கூறினார். நான் பிறப்பதற்கு முன்னரே அவர்கள் இறந்துவிட்டார்கள். இவர்கள் எனது பெற்றோர்களின், பெற்றோர்களின் பெற்றோர். இவர்களுக்கு நான் கொள்ளுப் பேரன் என்று அம்மா கூறினார்.

எனது நண்பனின் பெயர் கோபால். இவர் எமக்குத் தூரத்து உறவினர் என்று அப்பா கூறினார். நாங்கள் இருவரும் அயல் வீட்டு நண்பர்களுடன் மாலையில் காற்பந்து விளையாடுவோம். தங்கையும் தனது தோழிகளுடன் வலைப்பந்து விளையாடுவாள். நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பமாக ஒற்றுமையாக வாழ்கிறோம்.

1. கேள்விகள்:

(1). உமது மூத்த சகோதரனை எப்படி அழைப்பீர்? .....

(2). உமது இளைய சகோதரனை எப்படி அழைப்பீர்? .....

(3). உமது அப்பாவின் மூத்த சகோதரனை எப்படி அழைப்பீர்? .....

(4). உமது அம்மாவின் இளைய சகோதரியை எப்படி அழைப்பீர்? .....

(5). உமது மைத்துனியின் அப்பாவை எப்படி அழைப்பீர்? .....

(6). உமது மைத்துனனின் சகோதரனை எப்படி அழைப்பீர்? .....

(7). பாட்டி என்று யாரை அழைப்பீர்? .....

(8). பூட்டன், பூட்டி என்பது யாரை? .....

(9). கோபால் என்பது யார்? .....

(10).மாலையில் நீங்கள் என்ன விளையாட்டுக்கள் விளையாடுவீர்கள்?

.....

2. குணவியல்புகள்:

அன்பு	கோபம்	பெருந்தன்மை	கோழை
முயற்சி	சோம்பல்	கருணை	பகையானவர்
நட்பு	கெட்டகுணம்	இரக்கம்	ஈதல்
சுயநலம்	பொதுநலம்	பலவீனமானவர்	அமைதி
இசைவு	திறமை	கண்டிப்பு	ஒப்புரவு
தாராள மனம்			

3. அதே கருத்துள்ள சொற்கள் தருக:

(1). நண்பன் - ..... (2). தோழி - .....

(3). பாட்டன் - ..... (4). பாட்டி - .....

(5). அப்பா - ..... (6). அம்மா - .....

(7). தம்பி - ..... (8). அக்கா - .....

(9). மைத்துனி -- ..... (10). மைத்துனன்-.....

4. ஒத்த ஓசைகொண்டு முடியும் சொற்கள் தருக:

அடி	படி	முடி	குடி	தடி	கடி	வடி
கரை	.....	.....	.....	.....	.....	.....
ஆடு	.....	.....	.....	.....	.....	.....
உடை	.....	.....	.....	.....	.....	.....
உலை	.....	.....	.....	.....	.....	.....
கரி	.....	.....	.....	.....	.....	.....
இறை	.....	.....	.....	.....	.....	.....

5. பெயர்ச்சொல்: ஒரு பெயரைக் குறிக்கும் சொல்.
வினைச்சொல்: ஒரு செயலைக் குறிக்கும் ஒரு சொல்.

	வினைச்சொல்	பெயர்ச்சொல்
(1). அடி	அடித்தான்	பாதம்
(2). இரை	இரைந்தது	உணவு
(3). உரி	உரித்தான்	மரப்பட்டை
(4). களி	மகிழ்ந்தான்	ஒருவகை உணவு
(5). தட்டு	தட்டினார்	தாம்பாளம்

6. பொருத்தமான வினைச்சொற்களை மூன்று காலங்களிலும் எழுதுக:

(1). நான் ..... (படி) (2). நாங்கள் ..... (படி)

(3). அவன் ..... (படி) (4). அவள் ..... (படி)

(5). அவர்கள் ..... (படி) (6). அது ..... (ஓடு)

(6). அவை ..... (ஓடு)

7. உயிர் எழுத்தில் குறில், நெடில், மெய் எழுத்துக்களை பின்வரும் சொற்களிலிருந்து எடுத்து எழுதுக:

(1) அம்மா (2) அப்பம்மா (3) ஆதனம் (4) தமிழ்மகன் (5) ஈதலறம்

(6) ஊஞ்சல் (7) இத்தால் (8) ஒளடதம் (9) ஐயப்பாடு (10) ஓடக்காரன்

குறில்	நெடில்	மெய்யெழுத்து

8. ஆங்கிலத்தில் மொழி பெயர்க்குக:

(1). அம்மா - ..... (2). தங்கை - .....

(3). சித்தப்பா - ..... (4). உறவு - .....

(5). மாமா - ..... (6). மாமி - .....

(7). அப்பா - ..... (8). அம்மம்மா- .....

(9). தம்பி - ..... (10). அப்பப்பா- .....

கண்டுபிடியுங்கள்:

(1). வயதில் முதியவர்
(2). மூக்குக்கண்ணாடி அணிந்திருப்பார்
(3). வாயில் பற்கள் சில அல்லது முழுவதும் இருக்காது
(4). தலைமுடி நரைத்து இருக்கும்
(5). விரைவாக நடக்கமாட்டார்
(6). அதிகம் சாப்பிடமாட்டார்
(7). அதிகநேரம் நித்திரை கொள்ளமாட்டார்
(8). கையில் ஒரு தடி (ஊன்றுகோல்) வைத்திருப்பார்
(9). அநேகமான குழந்தைகள் இவர்களைப் பார்த்திருக்கமாட்டார்கள்
(10). நான் இவரின் ஒருவகையான பேரன்

யார் இவர்? ..... (எத்தனையாவது கேள்வியில் கண்டுபிடித்தீர்கள்?)

வீட்டுவேலை

பெண்பாற் சொற்கள் எழுதுக:

(1). அப்பா - அம்மா
(2). அண்ணா - .....
(3). அரசன் - .....
(4). அவன் - .....
(5). அழகன் - .....
(6). ஆசிரியன் - .....
(7). கணவன் - .....
(8). குருடன் - .....
(9). செல்வன் - .....
(10). செவிடன் - .....
(11). எருது - .....
(12). களிறு - .....
(13). தம்பி - .....
(14). பேரன் - .....
(15). மகன் - .....
(16). புதல்வன் - .....
(17). மைத்துனன் - .....
(18). மணமகன் - .....
(19). நடிகன் - .....
(20). மருமகன் - .....

பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்க:

(1). கலைக்குப் பிணைபோல கடாவிற்கு - .....
(2). பாட்டனுக்குப் பாட்டி போல பூட்டனுக்கு - .....
(3). உறவுக்குப் பகை போல விருப்புக்கு - .....
(4). இலாபத்திற்கு நட்டம் போல வரவிற்கு - .....
(5). காலைக்கு மாலை போல இரவுக்கு - .....

எதிர்ச் சொற்களை எழுதி அவற்றிற்கான ஆங்கிலச் சொற்களையும் தருக:

(1). தாமதம் - முந்தி / வேளையோடு .....
(2). சுவை - ....
(3). முதல் - ....
(4). முதுமை - ....
(5). பழைய - ....
(6). போதல் - ....
(7). விழிப்பு - ....
(8). முன் - ....
(9). வெளியே - ....
(10). முடியும் - ....

	பெயர்ச்சொல்	வினைச்சொல்
(1). உடு	.....	.....
(2). ஆடு	.....	.....
(3). தை	.....	.....
(4). நகை	.....	.....
(5). மெய்	.....	.....

தரப்பட்ட வினையடிகளுக்கு வினைச்சொற்களை இறந்தகாலம், எதிர்காலங்களில் மட்டும் எழுதுக:

(1). பாடு	.....	.....
(2). உண்	.....	.....
(3). நட	.....	.....
(4). எழுது	.....	.....
(5). ஓடு	.....	.....
(6). பார்	.....	.....
(7). சிரி	.....	.....
(8). அழு	.....	.....
(9). குளி	.....	.....
(10). கழுவு	.....	.....

பாடம் - 3

புகழ் படைத்தோர்

சார்லிசப்ளின்

ஒவ்வொருவரும் பிறக்கும் போது சாதாரண குழந்தைகளாகவே பிறக்கின்றனர். அவர்களின் முயற்சியே அவர்களைப் புகழ்படைத்தோர் ஆக்குகின்றது. ஒவ்வொருவரும் தமது விருப்பமான தொழில்களில் முயலவேண்டும். விருப்பமும் ஆற்றலும் முயற்சியுமிருந்தால், அவர்கள் செய்யும் காரியங்களில் மிகப் புகழ் அடைவர். அதனால் அவர்கள் புகழேணியின் உச்சத்திற்கே சென்றுவிடுவர். இதனாலே கலைஞர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர், பாடகர், தொண்டர், வீரர் போன்றவர்கள் தங்கள் தொழிலில் மிக உயருகின்றார்கள். ஆபிரகாம் லிங்கன், தோமஸ் அல்வா எடிசன், சார்லிசப்ளின் போன்று பல்வேறு துறைகளில் புகழ்படைத்தோரை உலகம் மெச்சுகின்றது.

தமிழ் வளர்த்ததில் புகழ் படைத்தவர்களாக ஔவையார், திருவள்ளுவர், இளங்கோ, ஆறுமுகநாவலர், கால்ட்வெல், வீரமாமுனிவர், விபுலானந்த அடிகள், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், உமறுப் புலவர் போன்றோர் விளங்குகின்றார்கள். "சினிமா" உலகிலே புகழப்படும் கவிஞர்களாகக் கண்ணதாசன், வாலி, பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், வைரமுத்து போன்றோர் பெருமதிப்புள்ளவர்கள். ஈழத்திலே கவிதை எழுதுவதில் புகழ் படைத்தோராக விபுலானந்த அடிகள், சோமசுந்தரப் புலவர், இளவாலை அமுதுப்புலவர், காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை போன்றவர்களைக் கூறலாம்.

தோமஸ் அல்வா எடிசன்

தமிழ் உலகோடு அகில உலகத்தையும் பார்த்தால் பல துறைகளில் மிகமிகப் புகழ் படைத்தோரைக் குறிப்பிடலாம். உலகிற்கு நன்மை செய்து உயர்ந்தவர்கள் போற்றப்படுகிறார்கள், கெடுதல் செய்தவர்கள் தூற்றப்படுகிறார்கள். நன்மை செய்து புகழ்படைத்தோரை அறிவோம்; அவர்வழி முயல்வோம். அதனால் புகழ் பெறுவோம்.

1. கேள்விகள்: (உரையாடிய பின் எழுத விடுக.)

(1) பிறக்கும் போது குழந்தைகள் எப்படிப்பட்டோர்?

(2) எது அவர்களைப் புகழ்படைத்தோர் ஆக்குகிறது?

(3) செய்யும் தொழிலில் சிறப்படைய எவை இருக்க வேண்டும்?

(4) தமிழ் வளர்த்ததில் பெருமை பெற்ற நான்குபேர் எழுதுக.

(5) "சினிமா" உலகிலே புகழப்படும் கவிஞர்கள் மூவரின் பெயர் தருக.

(6) ஈழத்துக் கவிஞர் மூவரின் பெயர் தருக.

(7) உமக்கு விருப்பமான துறை யாது?

(8) யார் தூற்றப்படுவர்?

(9) யார் போற்றப்படுவர்?

(10) உமக்கு விருப்பமான துறையில் புகழப்படுபவர் யார்?

2. அதே கருத்துள்ள சொல் எழுதுக:

ஆற்றல்	-	.....	அறிவு	-	.....
அர்ப்பணி	-	.....	உயர்வு	-	.....
உலகம்	-	.....	தற்காலம்	-	.....
புதுமை	-	.....	நன்மை	-	.....
கெடுதல்	-	.....	உறுதி	-	.....
அழுக்காறு	-	.....	இடுக்கண்	-	.....
தியாகம்	-	.....	தூய்மை	-	.....
நாயகன்	-	.....	சாதனை	-	.....

3. எதிர்பால் சொற்கள் தருக:

பிரபல்யம்	-	.....	ஆண்	-	.....
ஒருவன்	-	.....	கிழவன்	-	.....
குருடன்	-	.....	செல்வன்	-	.....
செவிடன்	-	.....	அரக்கன்	-	.....
தலைவன்	-	.....	நடிகன்	-	.....
பண்டிதன்	-	.....	தோழன்	-	.....
வித்தகன்	-	.....	பாடகன்	-	.....
புதல்வன்	-	.....	நம்பி	-	.....

4. பின்வரும் வசனங்களில் உயிர் எழுத்துக்கள் கொண்ட சொற்களை குறில்-நெடில் ஆகவும், மெய் எழுத்துக்களை மூவினங்களாவும் பிரித்து அட்டவணையை நிரப்புக:

1. பூனை பால் குடிக்கும்.
2. திருவள்ளுவர் பல குறள் வெண்பாக்களை எழுதினார்.
3. ஔவையார் பல இனிய தமிழ்ப் பாடல்களை பாடினார்.
4. மகாத்மா காந்தி இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார்.
5. ஈழத்தில் இன்று பல கவிஞர்கள் உளர்.

உயிர் எழுத்துக்கள்

குறில்	நெடில்

மெய் எழுத்துக்கள்

வல்லினம்	மெல்லினம்	இடையினம்

5. ஒலி வேறுபாடுகள்: ரகர, றகரச் சொற்கள்

அரி (சிங்கம்) - அரியை மிருகங்களின் அரசன் என்று கூறுவர்.

அறி (தெரிந்துகொள்ளுதல்) - நாம் தமிழ்ச் சொற்களின் பொருள்களை அறியவேண்டும்.

எரி (எரித்தல்) - வீடுகள் தீப்பிடித்து எரிந்தன.

எறி (எறிதல்) - குமரன் எறிந்த கல் வீட்டுக் கண்ணாடியை உடைத்தது.

இரை (உணவு) - சிங்கம் காட்டில் இரை தேடச் சென்றது.

இறை (கடவுள்) - கோயில்களில் இறைவனைக் காணலாம்.

உரி (வெங்காயம்) - வெங்காயத் தோல் உரிக்க வேண்டும்.

உறி (தூக்கு) - சில வீடுகளில் இப்போதும் சட்டியும் பானையும் உறியில் இருக்கும்.

கரி (எரித்த விறகு) (யானை) - கரி மிகவும் பெரிய காட்டு மிருகம்.

கறி (உணவு வகை) - எனக்கு மரக்கறி வகைகள் மிகவும் விருப்பம்.

குரை (குரைத்தல்) - நாய் முன்னர் அறிமுகம் இல்லாதவர்களைக் கண்டால் குரைக்கும்.

குறை (குற்றம்) - நாம் மற்றவர்களிடம் குறை காணக்கூடாது.

தரி (அணிதல்) - அரசன் தலையில் முடி தரித்திருந்தார்.

தறி (வெட்டுதல்) - காட்டில் மரங்களைத் தறித்து வீடுகள் கட்டுவார்கள்.

நிரை (வரிசை) - மாடுகள் நிரை நிரையாகச் சென்றன.

நிறை (பாரம்) - கடையில் சில பொருட்களை நிறையின்படியே விற்பார்கள்.

பரி (குதிரை) - பரிகளின் ஓட்டம் உலகில் பல நாடுகளில் மிகவும் பிரபல்யமானது.

பறி (பறித்தல்) - திருடன் கைப்பையைப் பறித்துக்கொண்டு ஓடினான்.

6. முழுவதையும் வாசித்து பின் கண்டுபிடிக்கவும்:

(1). வயதில் முதியவர்
(2). தலைமுடி நரைத்து இருக்கும்
(3). வறுமையால் வாடியவர்
(4). அதிகம் சாப்பிடமாட்டார்
(5). அதிகநேரம் நித்திரை கொள்ளமாட்டார்
(6). அரசர்களிடையே நிலவிய பகையை நீக்கியவர்
(7). கையில் ஒரு தடி (ஊன்றுகோல்) வைத்திருப்பார்
(8). பல இனிய தமிழ்ப்பாடல்களை எழுதியுள்ளார்
(9). தமிழ்க்கடவுள் முருகனோடு வாதம் செய்தவர்
(10). இவர் ஒரு பெண் புலவர்

யார் இவர்?..... (எத்தனையாவது கேள்வியில் கண்டுபிடித்தீர்கள்?)

வீட்டுவேலை

7. ஒத்த சொற்கள் எழுதுக:

ஆழி	-	.....	பாடல்	-	.....
கடவுள்	-	.....	தீமை	-	.....
காடு	-	.....	பூமி	-	.....
சூரியன்	-	.....	வீடு	-	.....
மனம்	-	.....	தந்திரம்	-	.....

8. எதிர்ப்பாற் சொற்கள் எழுதுக:

ஆண்	-	.....	வித்தகன்	-	.....
உத்தமன்	-	.....	சிறுவன்	-	.....
கணவன்	-	.....	தலைவன்	-	.....
குமாரன்	-	.....	துணைவன்	-	.....
சகோதரன்	-	.....	நம்பி	-	.....

9. தமிழில் எழுதுக:

1. Famous people .....
2. Effort .....
3. Profession .....
4. Apex .....
5. Poet .....

10. முழுவதையும் வாசித்துக் கண்டுபிடியுங்கள்:

(1). வயதில் இளையவர்
(2). தலையில் தலைப்பாகை இருக்கும்
(3). கையில் ஒரு தடி வைத்திருப்பார்
(4). வறுமையால் வாடியவர்
(5). பலமுறை சிறை சென்றவர்
(6). இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்
(7). தமிழ்த்தாய் வாழ்த்தை எழுதியவர்
(8). அநேகமான தமிழ்ப்பாடல்களை எழுதியுள்ளார்
(9). கோவில் யானையால் தாக்கப்பட்டு இறந்தவர்
(10). இவர் ஓர் ஆண் கவிஞர்

யார் இவர்?.....(எத்தனையாவது கேள்வியில் கண்டுபிடித்தீர்கள்?)

பாடம் - 4

தமிழ்மொழி

தமிழ் என்றால் இனிமை என்று பொருள்படும். உலகில் உள்ள மூத்த மொழிகளிலே தமிழும் ஒன்றாகும். தமிழ் தமிழர்களின் தாய் மொழியாகும். முற்காலத்தில் சேர சோழ பாண்டியர் ஆகிய மூவேந்தர் தமிழை வளர்த்தனர். தமிழ்ப் பெரியோர்களுக்கும், புலவர்களுக்கும் பொன்னும் பொருளும் கொடுத்துப் போற்றினர். இக்காலத்தில் அரசாங்கங்களும், பல்கலைக் கழகங்களும், பிற நிறுவனங்களும் தமிழைப் பேணி வளர்க்கின்றன. இப்போது நம் தமிழ்மொழி "செம்மொழி" ஆக்கப்பட்டு உலகில் பல பல்கலைக்கழகங்களில் தமிழ் போதிக்கப்பட்டு வருகிறது. அண்மையில் இந்திய அரசாங்கம் தமிழ் மொழியைச் செம்மொழியாக அங்கீகரித்துள்ளது.

தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. இதனை முத்தமிழ் என்று கூறுவர். இயற்றமிழ் இலக்கணத்துடன் கூடியது. இசைத்தமிழ் இசையுடன் கலந்தது. நாடகத்தமிழ் கதையும், இசையும், கூத்தும் கலந்து வருவது. தமிழிலே பல சிறந்த நூல்கள் இருக்கின்றன. அவற்றுள் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், திருக்குறள், அகநானூறு, புறநானூறு, கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், தேம்பாவணி, சீறாப்புராணம் போன்றவை மிகவும் சிறந்த நூல்களாகும். தற்காலத் தமிழிற்கு ஆறுமுகநாவலர், உ.வே, சுவாமிநாத ஐயர், கால்ட்வெல், பாரதியார், சுவாமி விபுலானந்தர், உமறுப்புலவர் போன்றோர் பெருந் தொண்டாற்றியுள்ளனர்.

கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்ற மொழிகள் தமிழிலிருந்து பிறந்தவை என்பர். சில விழாக்களில் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடி விழாவை ஆரம்பிப்பார்கள். தமிழ்த்தாய் வாழ்த்துக்கள் பலரால் எழுதப்பட்டபோதும் சுப்பிரமணிய பாரதியாரால் எழுதப்பட்ட "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி" என்ற பாடலும், மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை எழுதிய "நீராரும் கடலுடுத்த" என்று தொடங்கும் பாடல்களும் மிகவும் சிறந்தவை. தமிழ் என்ற சொல்லில் வல்லினம், மெல்லினம், இடையினம் சார்ந்த எழுத்துக்கள் உண்டு. தமிழ்மொழிக்கு இந்த "ழகரமே" தனிச்சிறப்புடையதாகும்.

1. கேள்விகள்:

(1). தமிழ் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? .....

(2). மூவேந்தர்கள் யார்? .....

(3). நீர் அறிந்த வேறு செம்மொழிகள் இரண்டின் பெயரைத் தருக.

.....

(4). முத்தமிழின் பிரிவுகளைக் கூறுக. .....

(5). தமிழ் நூல்கள் 5 தருக. .....

(6). தமிழ் வளர்த்தவர்களில் ஐவருடைய பெயர்களை எழுதுக.

.....

(7). தமிழிலிருந்து பிறந்த மொழிகள் எவை? .....

(8). நாடகத் தமிழ் என்றால் என்ன? .....

(9). தமிழ்த்தாய் வாழ்த்து எழுதிய ஒருவரின் பெயரை எழுதுக.

.....

(10). தற்போது தமிழ் கற்பிக்கப்படும் நாடுகள் ஐந்தினைத் தருக.

.....

2. இடைவெளிகளைத் தரப்பட்ட சரியான சொற்களைக்கொண்டு நிரப்புக:

(காந்தியை, பாரதியார், நூல்கள், வணக்கம், ஔவையார்)

(1). தொழுதல், அஞ்சலி செய்தல், பணிதல் என்பனவற்றைக் குறிக்கும் ஒரு சொல்

.....

(2). சிறந்த குணங்களை உடைய மகாத்மா ..... எல்லோரும் புகழ்வார்கள்.

(3). அறிஞர்களின் வீட்டில் பல ..... இருக்கும்.

(4). "நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" இது ..... எழுதிய பாடல்.

(5). வாழ்க தமிழ்மொழி என்ற பாடலைப் பாடியவர் யார்?

3. சேர்த்து எழுதுக:

(1). தமிழ் + தாய் = ...

(2). வீடு + வேலை = ...

(3). மூன்று + உலகம் = ...

(4). அரிசி + சோறு = ...

(5). தென்னை + மரம் = ...

(6). உயிர் + மெய் = ...

4. பிரித்து எழுதுக:

(1). முதற்சங்கம் = ... + ...

(2). தமிழிலிருந்து = ... + ...

(3). செம்மொழி = ... + ...

(4). பூந்தோட்டம் = ... + ...

(5). பெரும்புகழ் = ... + ...

5. எதிர்ச் சொற்கள் தருக:

உதிக்கும் - .....

இல்லை - .....

முதல் - .....

சுகம் - .....

செல்வன் - .....

நாடு - .....

முன்பு - .....

எடு - .....

போதல் - .....

சுத்தம் - .....

6. கீழே தரப்பட்ட சொற்களை வைத்து 5 சொற்களுக்குக் குறையாமல் வசனங்கள் எழுதுக:

(1). தியாகி :- .....

(2). சேவை :- .....

(3). உண்மை :- .....

(4). புலவன் :- .....

(5). தாமரைப்பூ :- .....

7. லகர, ழகர, ளகரச் சொற்களின் விளக்கம்:

இலை
(மரத்தின் ஒரு பகுதி) - அதிகமான மரங்களின் இலை பச்சை நிறமாக இருக்கும்.

இளை(களைப்பு) - விரைவாக ஓடியதால் இளைத்துவிட்டேன்.

இழை (தைத்தல்) - பனை ஓலையால் பெட்டி இழைக்கலாம்.

வலி (நோவு) - உடலில் உள்ள காயத்தினால் வலி ஏற்பட்டது.

வளி (காற்று) - வளி மண்டலத்திலிருந்து காற்று வீசும்.

வழி (பாதை) - இலண்டன் வழிகளில் வாகனங்கள் நெருக்கமாக ஓடக் காணலாம்

ஒலி (சத்தம்) - பாட்டின் ஒலி மிகவும் இனிமையாக இருந்தது.

ஒளி (வெளிச்சம்) - சூரியனிலிருந்து பூமிக்கு ஒளி பரவும்.

ஒழி (இல்லாமல் செய்தல்) -அந்நாட்டில் வறுமை ஒழிந்தது.

கிலி (பயம்) - புலியைக் கண்டதும் நண்பன் கிலி பிடித்து நின்றான்.

கிளி (ஒரு பறவை) - கிளி பேசும்.

கிழி (கிழித்தல்) - அக்கா துணியைக் கிழித்து காயத்திற்குக் கட்டினார்.

விலா (மார்பு எலும்பு) - விலா எலும்புகள் மனிதரின் இதயத்தைக் காக்கின்றன.

விளா (ஒருவகை மரம்)- விளா மரத்தில் இருந்து பழங்கள் விழுந்தன.

விழா (கொண்டாட்டம்)- தமிழ் விழா இலண்டனில் கொண்டாடப்பட்டது.

வாலை (இளம்பருவம்)- வாலைப்பருவம் இனிமையானது.

வாளை (ஒருவகை மீன்)- வாளை மீன் கடலில் வாழும்.

வாழை (மரம்) - வாழைப்பழம் மிகவும் சுவையானது.

வீட்டுவேலை

8. ஆங்கிலமாக்குக:

(1). நீர் - .....
(2). வெளிச்சம் - .....
(3). இளமை - .....
(4). தை - .....
(5). பணி - .....
(6). நூல் - .....
(7). வேலை - .....
(8). கருத்து - .....
(9). தொடக்கம் - .....
(10). ஆடை - .....

10. எழுவாய் பயனிலை செய்யப்படுபொருளை எழுதுக:

1. நான் பரிசளிப்பு விழாவில் தமிழ்ப் பாடத்திற்கெனப் பரிசு பெற்றேன்.
2. கட்டிடம் தீப்பிடித்து எரிந்தது.
3. அரசர்கள் பலர் தமிழை வளர்த்தனர்.
4. ஔவையார் பல இனிய தமிழ்ப்பாடல்களை இயற்றினார்.
5. நான் பரீட்சையில் சித்தியடைந்தேன்.

எழுவாய்	பயனிலை	செய்யப்படுபொருள்

பாடம் - 5

தமிழ்க் கவிதைகள்

தமிழ் என்றால் அன்பு என்றும் பொருள்படும். பேசும் போதும் எழுதும் போதும் நல்ல கருத்துக்களை சந்தங்களுடன் எழுதினால் அம்மொழியிலுள்ள கவிதைகள் அந்த மொழியை மேலும் அழகுபடுத்துவனவாக அமையும். தமிழிலே புலமை உள்ளவர்கள் சொல்லாட்சியும் கருத்தாழமும் கொண்ட பாடல்களை எழுதினால் மொழி செவிக்கு இனிமையானதாக அமையும்.

தமிழ்க் கவிதைகள் என்றவுடன் எமக்கு முதலில் நினைவுக்கு வருபவர்கள் ஔவையார், கம்பர், பாரதியார் போன்றோர் ஆவர். ஔவைப் பாட்டி விநாயகக் கடவுளை வேண்டிப் பாடிய பாடல் இதுவாகும்.

ஔவையார்

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றும் தா."

திருவள்ளுவர் இரு வரிகளைக்கொண்ட கவிதைகளை எழுதியிருக்கிறார். இவை சிறிதாக இருப்பதனால் இவற்றைக் "குறட்பா" என்று கூறுவார்கள். குறள் என்றால் குறுகியது என்று பொருள்.
"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்பது முதல் திருக்குறள்.

திருவள்ளுவர்

பாரதியார்
"ஓடி விளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருத்தல் ஆகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா
ஒரு குழந்தையை வையாதே பாப்பா"
என்று குழந்தைக்காகப் பாடல் எழுதியிருக்கின்றார். பழம் தமிழ்க்கவிதைகள், அகத்தினை, புறத்தினை என இருபிரிவாகப் பெரும்பாலும் வீரத்தையும் காதலையும் கருப்பொருளாக்க கொண்டு பாடப்படுகின்றன. பாடல்கள் எழுதுவதற்கு கருப்பொருள் எதுவாகவும் இருக்கலாம். இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி, பாசம், அறிவுரை என்று இது பல வகைப்படும். நாமும் தமிழைக் கற்று நல்ல தமிழ்க் கவிதைகளை எழுத முயற்சி செய்வோம்.

பாரதியார்

1. கேள்விகள்:

(1). கவிதைகள் எழுதுவதற்கு முதலில் என்ன தேவை? .....

(2). ஒரு மொழியை அழகுபடுத்துவது எது? .....

(3). கவிதைகள் எழுதிய ஒரு பெண் புலவரைக் குறிப்பிடுக:.....

(4). மேலே குறிப்பிடாத உமக்குப் பிடித்த கவிதை ஒன்றை எழுதுக:

.....

(5). சங்கத் தமிழ் எவை? .....

(6). விநாயகக்கடவுளின் இன்னொரு பெயரை எழுதுக: .....

(7). குறள் என்பதன் பொருள் என்ன? .....

(8). மேலே குறிப்பிடாத இரு கவிஞர்களின் பெயர்களை எழுதுக :

.....

2. பொருள் எழுதுக:

அழகு	-	பாடல்கள்	- .....
உதவி	-	நல்ல	- .....
கடவுள்	-	கலந்து	- .....
கரி	-	பார்	- .....
ஆகாது	-	தா	- .....
ஓய்ந்திருத்தல்	-	ஆரம்பம்	- .....
கற்றல்	-	குழந்தை	- .....
பிடித்த	-	அறிவுரை	- .....

3. எதிர்ச்சொற்கள் எழுதுக:

இனிமை	-	அழகாக	- .....
விருப்பு	-	முடியாது	- .....
இயற்கை	-	ஆக்குதல்	- .....
இலகுவாக	-	ஒன்று	- .....
ஞாபகம்	-	வருதல்	- .....
முன்னர்	-	சிலர்	- .....
ஆரம்பம்	-	அரிது	- .....

4. ரகர, றகரச் சொற்கள்:

அரம் (ஒரு கருவி) - கத்தியை அரத்தால் தீட்டலாம்.
அறம் (தர்மம்) - அறம் செய்தால் புண்ணியம் கிடைக்கும் என்று கூறுவார்கள்.
அருகு (அண்மை) - குளத்தின் அருகே கோயில் கட்டுவர்.
அறுகு (ஒருவகைப் புல்) - பூசைக்குப் பயன்படுவது அறுகம் புல்.
அரை (அரைவாசி, அரைத்தல்) - ஆடை இல்லா மனிதன் அரை மனிதன் என்று கூறுவார்கள்.
அறை (வீட்டின் ஒரு பகுதி) - எனது அறையை நான் மிகவும் சுத்தமாக வைத்திருக்கிறேன்.
கூரை (வீட்டின் மேற்பகுதி) - ஒவ்வொரு வீட்டிற்கும் கூரை அவசியம்.
கூறை (மணப்பெண் அணியும் சேலை) - திருமணநாளில் மணப்பெண் கூறைச் சேலை அணிவார்.
இரத்தல் (பிச்சையெடுத்தல்): - இரத்தல் இழிவு.
இறத்தல் (சாதல்): - பிறந்த ஒவ்வொருவருக்கும் இறத்தல் தவிர்க்கமுடியாத ஒன்று.
முருக்கு (ஒருவகை மரம்) - முருக்கு பருத்தாலும் தூணுக்கு உதவாது.
முறுக்கு (சிற்றுண்டி) - அம்மா சுவையான முறுக்குச் செய்தார்.

5. சேர்த்து எழுதுக:

(1). மணி + ஓசை = ...
(2). அறை + எங்கும் = ...
(3). இறைச்சி + கறி = ...
(4). வீடு + வேலை = ...
(5). முதல் + பரிசு = ...

6. பிரித்து எழுதுக:

(1). வீட்டுக்கூரை = ... + ...
(2). உலகெங்கும் = ... + ...
(3). பிறப்பன்று = ... + ...
(4). வெள்ளைப்பசு = ... + ...
(5). கன்றுக்குட்டி = ... + ...

7. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் எழுதுக:

(1). சனிக்கிழமைகளில் / செல்வோம் / தமிழ்ப்பாடசாலைக்குச் / நாம்.

(2). பூக்கள் / வீசின / தோட்டத்தில் / மலர்ந்த / வாசனை.

(3). விளையாட்டுப்போட்டிகள்/நடைபெறும்/2012 ஆம் ஆண்டு/ இங்கிலாந்தில் /ஒலிம்பிக்ஸ்

(4). காப்போம் / சேர்ந்து / தமிழ்மொழியைக் /எல்லோரும் / நாம்.

(5). செல்வம் / சிறந்தது / கல்விச் / செல்வங்களுள்.

8. பொருத்தமான வினைச் சொற்களை தெரிவுசெய்து எழுதுக:
(வருவேன், வந்தார்கள், வரமாட்டாள், வரவில்லை, வந்தார்)

(1). மாமா சனிக்கிழமை எங்கள் வீட்டிற்கு .....

(2). நீங்கள் ஏன் தமிழ்ப்பாடசாலைக்கு .....

(3). நான் இன்று சற்றுத் தாமதமாகவே பாடசாலைக்கு .....

(4). சித்தியும், சித்தப்பாவும் எங்கள் வீட்டிற்கு .....

(5). எனது தங்கை நாளை பாடசாலைக்கு .....

9. சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதியபின்னர் அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்குக.

(1). நீர் / அவசியமானது / உயிர்வாழ / நாம் .....

.....

(2). அழகாக / இரவில் / சந்திரன் / இருக்கும் .....

.....

(3). எரிபொருள் / மோட்டார்வண்டி / தேவை / ஓடுவதற்கு .....

.....

(4). கவிதைகள் / கவிஞர் / இயற்றுபவரை / என்று / அழைப்பர் .....

.....

(5). முள் / ரோஜா / இருக்கும் / செடியில் .....

.....

10. எழுவாய் பயனிலை செயப்படுபொருளை எழுதுக:

1. நான் நேற்று ஒரு திருமணவிழாவிற்குச் சென்றேன்.
2. பல பழங்கள் கீழே விழுந்தன.
3. என் தங்கை அழகாக நடனம் ஆடினாள்.
4. கோயிலில் நின்ற மயில் தன் தோகையை விரித்து ஆடியது.
5. அம்மா நேற்று தோசை சுட்டார்.

எழுவாய்	பயனிலை	செயப்படுபொருள்

பாடம் - 6

செய்யும் தொழிலே தெய்வம்

"செய்யும் தொழிலே தெய்வம். அதில் திறமைதான் நமது செல்வம்". இதனைப் பாடியவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் ஆவார். தொழில் செய்தால் உழைப்பு வரும். உழைப்பில்லாமல் சீவிக்க முடியாது. நாம் உண்ண, உடுக்க உழைக்க வேண்டும். சீரான வீட்டில் வசிக்கவும் உழைக்கவேண்டும். ஆதலால் எவரும் தொழில் தேடிச் செய்ய வேண்டும். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பது எமது ஆன்றோர் பொன்மொழி. இதனாலே முயற்சிசெய், முன்னேறலாம் என்ற எண்ணம் ஏற்படும்.

பிறக்கும்போது எல்லா மக்களும் சமமே என்பார்கள். பிறந்த பின் சிலர் ஏழைகளாகவும், சிலர் செல்வர்களாகவும், வருகிறார்கள். இதற்குக் காரணம் என்ன என்று எண்ணிப் பார்க்கலாம். எதைச் செய்தாலும், விரும்பித் திறமையாய்ச் செய்வதனாலே, உயர்ச்சியும் புகழ்ச்சியும் செல்வமும் செழிப்பும் வரும். திருவள்ளுவரும் தனது பாட்டிலே, "தோன்றிவிட்டோம், புகழொடு வாழவேண்டும்" என்கிறார். புகழொடு வாழத் தொழில் செய்வோம். "காவல் செய்வோனும் சேவையே செய்கிறான்" என்று மில்ரன் என்ற ஆங்கிலப் புலவர் கூறுகிறார். இதனால் எத்தொழிலும் சமமானதே. வளர்ந்த நாட்டிற்குப் புலம் பெயர்ந்துள்ளோம். இங்கு பல தொழில்களைப் படிக்கும் நிலையங்கள் உண்டு. தொழில்நுட்பக் கல்லூரிகள், சர்வகலாசாலைகள் போன்றனவும் உண்டு. முன்பு சில தொழில்களே இருந்தன. இன்று தொழிற்பிரிவுகள் ஏராளம் உண்டு. இன்று படித்த பலர் விஞ்ஞானிகளாய், ஆய்வாளர்களாய், மருத்துவர்களாய், எந்திரவியல் நிபுணர்களாய், ஆசிரியர்களாய், தாதிகளாய், வியாபாரம் செய்பவர்களாய் இருக்கிறார்கள். நாமும் ஒன்றை விரும்பிக் கற்க வேண்டும். இதனால் புகழும் வாழ்க்கை வசதிகளும் பெறலாம். இதனால் கல்வி கற்போம். வாழ்வில் உயர்வோம், வளம் பல பெறுவோம்.

"செய்யும் தொழிலே தெய்வம், திறமையாயச் செய்வதே செல்வம்".

1. விடை எழுதுக: (உரையாடிய பின் எழுத விடுக)

(1) கல்யாணசுந்தரனாரின் பாட்டு முதல் வரி என்ன? .....

(2) தொழில் செய்தால் என்ன கிடைக்கும்? .....

(3) ஏன் உழைக்க வேண்டும்? .....

(4) எமது ஆன்றோர் மொழி என்ன? .....

(5) இந்த மொழியால் நாம் விளங்குவது என்ன? .....

(6) பிறக்கும்போது சமமானவர்களாகப் பிறந்தோர், பின்பு ஏன் வறியோர் செல்வராய் மாறுகிறார்கள்? .....

(7) எத்தொழிலையும் விரும்பித் திறமையாகச் செய்வதால் எவற்றை அடையலாம்? .....

(8) திருவள்ளுவர் என்ன சொல்கிறார்? .....

(9) மில்ரன் கூறுவதென்ன? .....

(10) நீவிர் அறிந்த சில தொழில்கள் 5 எழுதுக.

.....

.....

(11) நீர் எதனை விரும்புகிறீர்? .....

(12) ஏன் அதனை விரும்புகிறீர்? இரண்டு காரணங்கள் தருக.

.....

(13) அதற்கு நீர் என்ன செய்ய வேண்டும்?

.....

(14) இந்நாட்டில் தொழில்களை எங்கெங்கே படிக்கலாம்?

.....

2. பின்வருவோர் யார்?

(1) கல்வி கற்பிப்பவர் : .....

(2) அறிவிப்புகள் செய்பவர் : .....

(3) இசைக்கருவி மீட்டுபவர் : .....

(4) உழுது பயிர்செய்பவர் : .....

(5) உளவு பார்ப்பவர் : .....

(6) கவிதை எழுதுபவர் : .....

(7) நோயாளிகளைப் பராமரிப்பவர் : .....

(8) காவல் செய்பவர் : .....

(9) நீதி வழங்குபவர் : .....

(10) கப்பல் செலுத்துபவர் : .....

(11) விமானம் செலுத்துபவர் : .....

(12) ஆய்வு செய்வோர் : .....

(13) வாகனம் செலுத்துவோர் : .....

(14) மக்கள் சேவை பணம் வேண்டாது செய்வோர்: .....

(15) வியாபாரம் செய்பவர் : .....

3. அதே கருத்துள்ள சொல் எழுதுதல்:

அஞ்சல் - ..... தொழில் - .....

உளவு - ..... உழவு - .....

கவிதை - ..... தாய் - .....

முடி - ..... நகை - .....

துணி - ..... தெய்வம் - .....

இறத்தல் - ..... தோன்றுதல்- .....

4. எதிர்ச் சொற்கள் எழுதுக:

வெற்றி - ..... கொடு - .....

பகை - ..... முதல் - .....

சோம்பேறி - ..... பிடித்த - .....

பலர் - ..... விருப்பு - .....

போர் - ..... ஆக்கம் - .....

பிறப்பு - ..... தோன்றுதல்- .....

வீட்டுவேலை

5. நீர் விரும்பும் ஐந்து தொழில்கள் வரிசை ஒழுங்கில் எழுதுக:

(1). ..... (2). .....

(3). ..... (4). .....

(5). .....

6. நீர் முதலாவது எழுதிய தொழிலை ஏன் கூட விரும்புகின்றீர்?

.....

.....

7. எதிர்ச் சொற்களை எழுதி அவற்றிற்கான ஆங்கில சொற்களையும் தருக:

அங்கு - ....

பகைவன் - ....

அதிகம் - ....

அழு - ....

அடைத்தல் - ....

அடி - ....

ஆக்குதல் - ....

ஆகும் - ....

ஆம் - ....

ஆரம்பம் - ....

பாடம் - 7

வீடுகள்

ஆதிகாலத்தில் மனிதன் மிருகங்களோடு காட்டில் வாழ்ந்தான். மனிதன் தனது பகுத்தறிவினால் வாழ்வதற்கேற்ற வீடுகளைக் கட்டினான். அவை கல்லாலும், மண்ணாலும், மரங்களினாலும் ஆனவை. சிறிய பாதுகாப்பான குடிசைகள் அமைத்தும் வாழ்ந்தான். அவை நீர் நிலைகளுக்கு அருகிலே காணப்பட்டன. மனிதர் வாழும் இடத்தை வீடு என்று அழைப்பர். மிருகங்கள் இருக்கும் இடத்தைக் காடு என்று அழைப்பர்.

தற்கால வீடுகளில் சுற்றுச்சுவர், உட்சுவர், கூரை, கதவு, யன்னல் என்பன இருப்பதைக்காணலாம். ஆனால் பல மாடிக் கட்டிடங்களில் இந்த அமைப்புகளைக் காணமுடியா. வீடுகளில் வரவேற்பு அறை, படுக்கை அறை, சமையல் அறை, சாப்பாட்டு அறை, குளியல் அறை, மலசலகூடம், படிக்கும் அறை, பூசை அறை என அறைகளைப் பிரித்து வைத்திருப்பதையும் காணலாம்.



ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டின் காலநிலைகளுக்கு ஏற்ப வீடுகளை அமைத்து வாழ்கின்றனர். விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் மக்கள் இப்போது இரும்பு, சீமெந்து, கல், மணல், மரம் போன்றவைகளைக் கொண்டு பெரிய வீடுகளை அமைத்து வாழ்கிறார்கள். மின்சாரம், எரிவாயு, தண்ணீர், தொலை தொடர்புச் சாதனங்கள் என்பன பல மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டுவரப்படுகின்றன. குளிர் நாடுகளில் வீடுகள் மின்சாரம், நிலக்கரி போன்றவற்றால் வெப்பமாக்கப்படுகின்றன. அதேபோல் வெப்பநாடுகளில் வீடுகள் குளிரூட்டப்படுகின்றன.

ஒவ்வொருவரும் தமது வசதிக்கு ஏற்பச் சிறிய வீடுகள் தொடக்கம் பெரிய மாளிகைகள் வரை அமைத்து வாழ்கிறார்கள். தாயகங்களில் தமிழ் மக்கள் வாழும் பல வீடுகளின் முன்னால் ஒரு முற்றம் இருக்கும். இதனைத் தினமும் துப்புரவு செய்து அழகாக வைத்திருப்பார்கள். இதிலே பல கொண்டாட்டங்களும் நடைபெறும். சிறுவர் ஓடி விளையாடுவதற்கும் இது பயன்படும். இங்கிலாந்து போன்ற நாடுகளில் வீட்டிற்கு முன்னால் சிறு தோட்டமும், பின்னால் பெரிய தோட்டமும் அமைந்திருப்பதைக் காணலாம். அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப இங்கே மக்கள் அழகான பூமரங்களும், காய் கனி வகைகளும் வளர்ப்பார்கள்.

1. கேள்விகள்: (உரையாடியபின் எழுதுதல் வேண்டும்)

(1). ஆதி காலத்தில் வீடுகள் எதனால் கட்டப்பட்டன? .....

(2). சிறிய வீடுகளை எப்படி அழைப்பர்? .....

(3). நீர் நிலைகள் என்றால் என்ன? .....

(4). ஒரு வீட்டில் முக்கியமாக இருக்க வேண்டியவை எவை? .....

(5). 5 வகையான அறைகளை எழுதுக .....

(6). வீடு கட்டுவதற்குத் தேவையானவை எவை? .....

(7). வீடுகள் எப்படி வெப்பமாக்கப்படுகின்றன? .....

(8). முற்றம் எங்கே இருக்கும்? .....

(9). தோட்டம் அநேகமாக எங்கே அமைந்திருக்கும்? .....

(10). எரிவாயு எதற்குப் பயன்படும்? .....

2. ஒத்த கருத்துள்ள சொற்கள் எழுதுக:

வீடு - ..... காடு - .....

ஆதி - ..... நீர் - .....

யன்னல் - ..... துப்பரவு - .....

சரித்திரம் - ..... அமைத்தல்- .....

தினமும் - ..... அருகில் - .....

3. எதிர்ச்சொற்கள் எழுதுக:

வெப்பம் - ..... அநேகம் - .....

விருப்பம் - ..... அமைத்தல்- .....

அழகு - ..... முன்னால் - .....

பிரி - ..... சிறிய - .....

வளர்ச்சி - ..... ஆக்குதல் - .....

4. ஆங்கிலத்தில் எழுதுக:

குளிர் -- ..... பனிமழை - .....

மழை - ..... வெள்ளம் - .....

மண்சரிவு - ..... இடிமுழக்கம்-.....

மின்னல் - ..... புயல் - .....

காற்று - ..... சூறாவளி - .....

பூகம்பம் - ..... நிலநடுக்கம்- .....

எரிமலை - ..... ஆழிப்பேரலை- .....

5. தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள் தரும் வசனங்கள் எழுதுக:

வெள்ளம் :- .....

மண்சரிவு :- .....

புயல் :- .....

காற்று :- .....

நிலநடுக்கம் :- .....

எரிமலை :- .....

ஆழிப்பேரலை:-.....

6. ஒருமைச் சொற்களுக்கு ஏற்ற பன்மை எழுதுக:

வீடு - ..... யன்னல் - .....

நாடு - ..... மனிதன் - .....

இடம் - ..... மிருகம் - .....

கல் - ..... அறை - .....

இனம் - ..... சிறுவன் - .....

வீட்டுவேலை

7. ஒருமைக்கு ஏற்ற பன்மையையும், பன்மைக்கு ஏற்ற ஒருமையையும் எழுதுக:

நான்	-	.....
.....	-	குடங்கள்
நீ	-	.....
.....	-	பழங்கள்
அது	-	.....
.....	-	அவர்கள்
எழுத்து	-	.....
.....	-	ஓடுகின்றன
நாய்	-	.....
.....	-	பற்கள்
இது	-	.....
.....	-	எங்கள்
மாணவன்	-	.....

8. தரப்பட்ட பந்தியை ஆங்கிலமாக்குக.

காலம் வேகமாக மாறிவருகின்றது. புதிய ஊடகங்கள் மக்கள் தொடர்புகளை மிகவும் எளிதாக்கிவிட்டன. இளம் சிறுவர்களுக்குத் தொலைக்காட்சி, கைத்தொலைபேசி, இணையத்தளம் என்பன மிகவும் எளிதாகக் கிடைக்கின்றன. இந்த வாய்ப்புக்கள் நல்ல விடயத்திற்காக இருக்கும்வரை மகிழ்ச்சிதான். ஆனால் அவற்றை இளைஞர்கள் தவறாகப் பயன்படுத்தும்போது பெற்றோருக்கும், மற்றவர்களுக்கும் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

.....

.....

.....

.....

.....

.....

பாடம் - 8

தைப்பொங்கல் விழா

பொங்கல் திருநாள் ஒவ்வொரு வருடமும் தைமாதத்தில் கொண்டாடப்படும். இது அறுவடைத்திருநாள், தமிழர் திருநாள் எனப் பல்வேறு பெயர்கள் கொண்டழைக்கப்படும். பொங்கல் விழா, தமிழர்களின் தனிப்பெரும் விழாக்களில் முதன்மையானது. தைமாதப் பிறப்பின் போது சூரியனுக்குப் படையலிட்டு இத் திருநாள் கொண்டாடப்படும். பொங்கல் விழா நான்கு நாட்கள் கொண்டாடப்படும். முதல் நாள் கொண்டாடப்படும் விழாவைப் போகி என்றும், இரண்டாம் நாள் விழாவைப் பொங்கல் என்றும், மூன்றாம் நாள் விழாவை மாட்டுப் பொங்கல் எனவும், நான்காவது நாள் விழாவை காணும் பொங்கல் எனவும் அழைப்பது வழக்கம்.

போகிப்பண்டிகை தினத்தன்று அதிகாலையில் வீட்டில் உள்ள பழைய துணிமணிகளையும், பொருட்களையும் வீட்டின் முன் போட்டுத் தீயிட்டுக் கொளுத்துவர். புதிய துணிமணிகளையும், பொருட்களையும் வாங்குவர் அந்த வருடம் முழுதும் நல்ல மழையை தந்து மக்களின் வாழ்வை செழுமைப்படுத்தும்படி மழைக்குரிய தெய்வமான இந்திரனை வேண்டிக் கொள்வர்.

அடுத்த நாள் கொண்டாடப்படுவது பொங்கல் விழா ஆகும். வீட்டின் முன்புறமோ அல்லது பின்புறமோ கோலமிட்டு அதன் நடுவே பானை வைத்துப் பொங்கல் பொங்குவர். அப்போது பானையில் மாவிலை, மஞ்சள், இஞ்சியிலை

போன்றவற்றைக் கட்டுவர். இவை மங்கலத்துக்கும் பசுமைக்கும் அடையாளமாகும். பொங்கலின் போது அரிசி பொங்கி வரும் போது பெண்கள் "பொங்கலோ பொங்கல், பொங்கலோ பொங்கல்" என குரலிடுவர். இந்தப் பொங்கலின் போது கரும்பும் படைப்பர். கரும்பு வாழ்வில் இனிமையையும், மகிழ்வினையும் குறிக்கும். எனவே பொங்கல் விழா என்பது மக்கள் வாழ்வில் மங்கலம், செழுமை, இனிமை என்பன நிலைத்து நிற்கச் சூரியனை வேண்டும் விழா ஆகும்.

அடுத்துக் கொண்டாடப்படும் விழா மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல் ஆகும். இவ்விழா ஆண்டு முழுவதும் விவசாயிகளுக்கு தோள் கொடுத்து உழைத்த மாடுகளுக்கு நன்றி தெரிவிப்பதற்காகக் கொண்டாடப்படும். அன்று பசுமாடுகள், காளை மாடுகளுக்குக் குளிப்பாட்டி கொம்புகளில் வர்ணம் தீட்டிக் கழுத்தில் மாலைகள் சூட்டுவர். கிராமப் பகுதிகளில் பட்டிப் பொங்கல் அன்று மஞ்சுவிரட்டு அல்லது ஜல்லிக்கட்டு எனும் தமிழரின் வீர விளையாட்டு நடைபெறுவதும் வழமை. ஈழத்தில் பொதுவாக அன்றைய தினம் மாட்டுச் சவாரிப் போட்டிகள் நடைபெறுவதும் உண்டு.

பொங்கல் விழாவில் இறுதியாக கொண்டாடப்படுவது காணும் பொங்கல் ஆகும். பொங்கல் விழாவையொட்டி உற்றார், உறவினர், நண்பர்கள் சந்தித்துப் பேசி மகிழ்வது இவ்விழாவாகும். இந்த நாளில் பெண்கள் அரிசியில் சர்க்கரை சேர்த்து காகங்களுக்குக் கொடுப்பர். இப்படிச் செய்தால் சகோதர பாசம் நிலைக்கும் என்பது மரபாகும்.

1. பயிற்சிகள்:

1. தைப்பொங்கல் எந்த மாதத்திலே கொண்டாடப்படும்?

.....

2. அதனை எந்தத் திருநாள் என்பர்?

.....

3. தைப்பொங்கல் எத்தனை நாட்கள் கொண்டாடப்படும்?

.....

4. அவற்றின் பெயர்கள் என்ன?

.....

5. போகிப் பண்டிகையன்று என்ன செய்வர்?

.....

6. இந்திரனை என்ன வேண்டுவர்?

.....

7. பொங்கல் பொங்கும்போது பெண்கள் என்ன கூறிக் குரலிடுவர்?

.....

8. பொங்கல் விழாவில் சூரியனிடம் எவற்றை வேண்டிக் கேட்பர்?

.....

9. காளைகளை அடக்கும் விளையாட்டை எப்படிக் கூறுவர்?

.....

10. "காணும் பொங்கலன்று" என்ன செய்வர்?

.....

2. மாறி இருக்கும் எழுத்துக்களை ஒழுங்காக்கி கருத்துள்ள சொல்லாக்குக:

		முதன்மையானது
(1)	ன், மை, த, து, ன, யா,மு	
(2)	ல், ங், டு, மா, க, பொ, ப், ட்	.....
(3)	லை, சி, யி, இ, ஞ்,	.....
(4)	ம், ம, ள, க, ங்,	.....
(5)	டு, சு, ர, ட், வி, ஞ், ம	.....
(6)	ர், வி, ற, ன, உ	.....
(7)	ள், து. ம, ணி, க, ணி	.....
(8)	கோ, மி, ல, டு, ட்	.....
(9)	பு, கொ, ம்	.....
(10)	ம, ண், ட, ப், ப, டா, கொ, டு	.....

3. அதே கருத்துள்ள சொற்கள் எழுதுக:

(1) திருநாள் - .....
(2) குரலிடுதல் - .....
(3) முதன்மை - .....
(4) சூரியன் - .....
(5) மணி - .....
(6) காளை - .....
(7) செழுமை - .....
(8) இளைஞர் - .....
(9) இனிமை - .....
(10) நண்பர் - .....

4. எதிர்க் கருத்துள்ள சொற்கள் எழுதுக:

(1) முதன்மை - .....
(2) முதல்நாள் - .....
(3) வரட்சி - .....
(4) நிலைத்தல் - .....
(5) கசப்பு - .....
(6) இறுதி - .....
(7) முதியோர் - .....
(8) சேர்த்தல் - .....
(9) மங்கலம் - .....
(10) பொதுவான - .....

5. பின்வரும் சொற்களை அகர வரிசை ஒழுங்கில் எழுதுக:

ஆரம், ஈட்டி, ஔவியம், ஓடு, ஐவர், எட்டு, அம்மா, இஞ்சி, ஊண், ஒன்று, உடுப்பு, ஏர்.

.....

6. பின்வரும் சொற்களில் உள்ள மெய்யெழுத்துக்களை வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற பகுப்புள் எழுதுக:

கொக்கு, கன்று, காற்று, பகுப்பு, சார்த்து, நிகழ்ச்சி, கைந்நூல், செய்ந்நன்றி, நுங்கு, பஞ்சு, பிட்டு, எண், எழுத்து, பந்து, அம்பு, நல்லது, சவ்வு, யாழ், ஆள், வாழ்த்து.

சொல்	வல்லின மெய்	மெல்லின மெய்	இடையின மெய்
செய்ந்நன்றி		ந், ன்	ய்

7. சதுரத்தில் உள்ள எழுத்துக்களால் ஆக்கக் கூடியளவு சொற்கள் எழுதுக:

ள்	ல்	ப
பா	தி	ழ
ரு	ம்	நா

1. ..... 6. .....
2. ..... 7. .....
3. ..... 8. .....
4. ..... 9. .....
5. ..... 10. .....

8. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்குக:

(1) சூரியன் : ..... (6) பண்டிகை: .....

(2) மழைக்குரிய தெய்வம் : ..... (7) இனிமை : .....

(3) செழுமை : ..... (8) சுபீட்சம் : .....

(4) வீரவிளையாட்டு : ..... (9) கொம்பு : .....

(5) அலங்காரம் : ..... (10) வழமை: .....

9. நீங்கள் வாழும் இடங்களில் தைப்பொங்கல் எப்படிக் கொண்டாடுவீர்கள். 5 வசனம் எழுதுக:

(1) .....

(2) .....

(3) .....

(4) .....

(5) .....

பாடம் - 9

குடும்பமும் வீட்டுப்பொறுப்புகளும்

என் பெயர் வசந்தன். நான் என் பெற்றோருடன் கனடாவில் வசிக்கிறேன். இங்கு மக்கள் பெரும்பாலும் பெற்றோர் பிள்ளைகள் அடங்கிய சிறிய குடும்பங்களாகவே வாழ்கின்றனர். எனது குடும்பம் சற்றுப் பெரியது. அப்பா, அம்மா, நான், அக்கா, தம்பி, தங்கை, அப்பப்பா, அம்மம்மா, சித்தப்பா ஆகியோர் ஒன்றாக வாழ்கின்றோம்.

மேல்நாடுகளில் பண வசதி, போக்குவரவு வசதி, தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்பு உண்டு. ஆனால் ஒரு வீட்டில் வாழ்பவர்களுக்குப் பல பொறுப்புக்கள் உண்டு. தாயகத்தில் தாயும் தந்தையும் குடும்பத்தின் பொறுப்புக்களைச் செய்வார்கள். அவர்களால் செய்ய முடியாத வேலைகளைப் பணியாட்களைக்கொண்டு செய்விப்பார்கள்.

மேல்நாட்டில் பணியாட்களுக்குக் கூலி அதிகம். எனவே வீட்டில் உள்ளவர்களே வீட்டுப் பொறுப்புக்களைப் பகிர்ந்து செய்ய வேண்டும். எங்கள் வீட்டில் வேலைகளைப் பகிர்ந்து செய்கின்றோம்.

காலையில் எழுந்தவுடன் எல்லோரும் தங்கள் தங்கள் படுக்கைகளை மடித்துச் சீர் செய்வோம். அப்பாவும் அம்மாவும் வாரத்தில் ஐந்து நாட்கள் வேலைக்குச் செல்கின்றனர். அவர்களின் உழைப்பே எங்கள் செலவுக்கு உதவுகின்றது. வீட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்குவது அப்பாவின் கடமை. மோட்டார் வாகனத்தை ஓட்டுவதும் அதன் திருத்த வேலைகளைச் செய்விப்பதும் அப்பாவின் பொறுப்பாகும்.

அம்மா வாரத்தில் ஞாயிறு, புதன், சனி நாட்களிலே சமையல் செய்வார். சமைத்த உணவின் ஒரு பகுதியைக் குளிரூட்டியில், சேமித்து சமைக்காத நாட்களில் பயன்படுத்துவோம். இரவில் உணவருந்தியபின் சமைத்த

பாத்திரங்களையும் உணவுண்ட பாத்திரங்களையும் கழுவித் துடைத்து அடுக்குவதை அம்மாவும் அப்பாவும் சேர்ந்து செய்வார்கள்.

எங்களுக்குத் தேவையான ஆடையணிகளையும் பாடசாலை உபகரணங்களையும் அம்மா தேவைப்படும்போது வாங்கித் தருவார். அம்மம்மா காலை உணவைத் தயாரிப்பார். எடுத்துச் செல்வதற்காக மதிய உணவையும் செய்து தருவார். அப்பப்பா அம்மம்மாவுக்கு உதவிசெய்வார். அவர் காலையில் தம்பியையும் தங்கையையும் பாடசாலைக்குக் கூட்டிச்செல்வார். மாலையில் அழைத்து வருவதும் அவர் பொறுப்பு ஆகும்.

சனிக்கிழமை வீட்டைச் சுத்தப்படுத்தும் நாளாகும். அப்பாவும் சித்தப்பாவும் தூசி துடைப்பான்களால் தளபாடங்களின் மீது படிந்துள்ள தூசியைத் துடைப்பார்கள். அதன்பின் வீட்டுத் தரையை 'காற்றுறிஞ்சி' கருவியால் சுத்தம் செய்வார்கள். சமையல் அறையை அம்மாவும் அம்மம்மாவும் சுத்தம் செய்வார்கள். அக்காவும் நானும் குளியல் அறைகளைச் சுத்தம் செய்வோம். தம்பியும் தங்கையும் சிறியவர்கள். அவர்களுக்குப் பொறுப்புகள் இல்லை. அவர்கள் தங்கள் பொம்மைகளையும் புத்தகங்களையும் ஒழுங்கு செய்ய ஊக்கப்படுத்துவோம். அக்காவும் அம்மாவும் சனிக்கிழமைகளில் அழுக்கான உடைகளைத் துவைத்து, காயவைத்து, மடித்து வைப்பார்கள். நானும் அக்காவும் தேவையான சில உடைகளை அழுத்தம் செய்வோம்.

எனது நண்பன் ஒரு தனி வீட்டில் வசிக்கின்றான். அவனின் வீட்டில் மேலதிக வேலைகள் உண்டு. வாரத்தில் ஒருநாள் குப்பைகூளங்களைப் பைகளில் அல்லது கொள்கலன்களில் இட்டு தெருவோரத்தில் வைத்தல் வேண்டும். கோடையில் முற்றத்தில் வளரும் புல்லை இரண்டு வாரத்துக்கு ஒருமுறை வெட்டுதல் வேண்டும். குளிர்காலத்தில் வீட்டுள் செல்லும் பாதையில் பெய்யும் பனியை வழித்து ஒருபுறமாகத் தள்ளிவிடல் வேண்டும்.

மேல்நாட்டில் குடும்பவாழ்கை சீராக நிகழ வேலைகளைப் பகிர்ந்து செய்தல் மிக அவசியம். கூடி ஆடிப்பாடி வேலை செய்தால் ஒருவருக்கும் அலுப்பிருக்காது. வீட்டில் மகிழ்ச்சியும் நிலவும்.

பயிற்சி

1. பின்வரும் சொற்களுக்கு ஏற்ற அடைமொழிகள் வைத்து கருத்துள்ள வசனங்கள் எழுதுக:

எடுத்துக்காட்டு: உனது படுக்கை அறையை மெதுவாகக் கூட்டு.

கூட்டு: .....

கழுவு: .....

சமையுங்கள்: .....

துடை: .....

வெட்டு: .....

மினுக்கு: .....

அடுக்கு: .....

2. முழு வசனங்களில் விடை எழுதுக:

(1). நீர் வசிக்கும் வீடு மாடி வீடா? அடுக்குமாடியா? அல்லது தனி வீடா?

.....

(2). உங்கள் வீட்டில் எத்தனை பேர் வசிக்கிறீர்கள்?

.....

(3). வீட்டுப் பொறுப்புக்களை நாம் ஏன் பகிர்ந்து செய்ய வேண்டும்?

.....

(4). நீர் வீட்டில் என்ன வேலை செய்வீர்?

.....

3. வீட்டுவேலை செய்வதை விபரிக்க உதவும் சில வினைச்சொற்கள் தரப்பட்டுள்ளன.

செய், சமை, துடை, கழுவு, எடு, பிடி, அடுக்கு, துவை, மடி, போடு, வா, இரு,

அட்டவணையை நிரப்புக:

	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
நான்	செய்தேன்	செய்கிறேன்	செய்வேன்
நாங்கள்			
நீர்			
நீங்கள்			
அவன்			
அவள்			
அவர்			
அவர்கள்			

4. ஒவ்வொரு மாணவரும் இப்பாடத்தில் வரும் ஒருவரைப் பாவனை செய்து (mimic) **தான் செய்யும் வேலைகளைக் கூறுக.**

.....

வீட்டு வேலை

1. உங்கள் வீட்டின் வரவேற்பு அறையிலுள்ள பத்துப் பொருட்களின் பெயர்களை எழுதுக.

.....

.....

.....

2. செய்முறை:

எங்கள் குடும்பத்தில் இருப்பவர் எல்லாரும்
எங்களுக் குதவிடும் நல்லவராம்
தங்கக் குணமுள்ள அப்பாவும் - அம்மாவும்
எங்களைக் கண்போலக் காப்பவராம்.

அண்ணா தம்பிதங்கை வீட்டிற் சிறுவேலை
செய்தே உதவியாய் வாழ்ந்திடுவோம்
எண்ணும் பொறுப்புக்கள் எல்லோரும் - பகிர்ந்து
செய்திடில் குடும்பம் செழித்திடும்.



(1) எங்களில் யார் நல்லவர்?

.....

(2) அவர்கள் என்ன செய்வார்கள்?

.....

(3) அப்பாவும் அம்மாவும் எப்படிப்பட்ட குணமுள்ளோர்?

.....

(4) அவர்கள் எம்மை எப்படிக் காப்பர்?

.....

(5) சிறு வேலைகள் செய்பவர் யார்?

.....

(6) எவற்றைச் சேர்ந்து செய்வோம்?

.....

(7) எது செந்தளிர்ப்பு?

.....

(8) உங்கள் குடும்பத்தில் இருப்பவர் யார்?

.....

(9) அப்பாவும் அம்மாவும் ஏன் தங்கக்குணமுடையோர்?

.....

(10) ஆதலினால் அவர்களுக்கு நாம் என்ன செய்யவேண்டும்?

.....

3. பின்வரும் சொற்களுக்குரிய இலக்கத்தை படத்தில் பொருத்தமான இடத்தில் குறிப்பிடுக:

1. குடம், 2. உறி 3. அடுப்பு 4. நீராவி 5. சுவாலை
6. மொட்டாக்கு 7. வளையல் 8. விறகு 9. பானை 10. சட்டி
11. தட்டு 12. அம்மி 13. குழவி 14. தாய்ச்சிச்சட்டி 15. கிடாரம்
16. அரிசி 17. உரல் 18. உலக்கை 19. அகப்பை 20. கிண்ணம்
21. துருவுபலகை 22. சுளகு

5. அறிந்து கொள்க:

(1). Television	தொலைக்காட்சி	(2). Fridge	குளிர்ப்பெட்டி
(3). Freezer	உறைபெட்டி	(4). Telephone	தொலைபேசி
(5). Book case	புத்தக நிலைப்பெட்டி	(6). Mobile Phone	செல்லிடபேசி
(7). Sauce Pan	தாளிச்சட்டி	(8). Rice Cooker	சோறாக்கி

பாடம் - 10

கலாசார விழாக்கள்

தமிழர் வாழ்வுச் சிறப்புகளை விளங்க வைப்பவை கலாசார விழாக்களாகும். விழா என்ற தமிழ்ச் சொல் "விழை" என்ற சொல்லிலிருந்து வந்தது. விழை என்றால் விரும்பிச் செய்வது. கலாசார விழாக்கள் எல்லோரும் விரும்பிக் கொண்டாடுபவையாகும்.

தைப்பொங்கல்

எமது கலாசார விழாக்களில் வருடப்பிறப்பு, தைப்பொங்கல் என்பன சில. சமயங்கள் தமிழ் பேசும் மக்களிடையே தீபாவளி, நத்தார், புனிதரமழான் போன்ற விழாக்களை அறிமுகப்படுத்தின. தனிப்பட்டோர் பிறந்த தினவிழா, பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றைக் கொண்டாடுவர். இன்று தமிழர் புலப் பெயர்வினால் அந்தந்த நாடுகளுக்குரிய "வலன்ரைன் தினம்" (Valentine day) "கலோவின்"(Halloween) போன்ற விழாக்களையும் கொண்டாடுகின்றனர். இதனால் ஓர் இனம் மற்ற இனங்களின் சிறப்புக்களை அறிகிறது, மதிக்கிறது. இதனால் ஒற்றுமையும், மனித இசைவும் வளர்கின்றன.



தீபாவளி

பல இனமாணவர்கள் இன்று பாடசாலைகளிலே சேர்ந்து படிக்கிறார்கள். அவர்களில் ஒருவர், "உங்களின் கலாசார சிறப்புகள் எவை? என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்? கலாசார விழாக்களில் ஒன்றான தமிழ்ப் புதுவருடப்பிறப்புத் தரும் சிறப்புக்கள் (values) பற்றி அறிவோம்.

தமிழர் புதுவருடப்பிறப்பு முன்பு சித்திரை மாதத்தில் கொண்டாடப்பட்டது. தமிழ் நாட்டு அரசு தைப்பொங்கல் அன்றே தமிழர் வருடப்பிறப்பு கொண்டாட சட்டம் இயற்றி உள்ளது. புதுவருடப் பிறப்பைத் தமிழர் புனிதமாகக் கொண்டாடுவர். அதிகாலையில் எழுந்து, குளித்துப் புத்தாடை உடுப்பர். இறைவனின் ஆசிபெற பெற்றோர் பிள்ளைகளைக் கோயிலுக்குக் கூட்டிச் செல்வர். இறை ஆசிபெற்றுத் தொடங்கும் கருமம், எப்போதும் நன்மை தரும் என்பது தமிழர் மரபாகும்.

அன்று நல்லவர் கையாலே கைவிசேடம் வாங்குவது நல்லது என்பது தமிழர் நம்பிக்கையாகும். கைவிசேடமாக, பெரியவர்கள் வெற்றிலையில் காசு, நெல்லு, மஞ்சள் போல்வன வைத்துக் கொடுப்பர். வெற்றிலை செல்வப் பெருக்கத்தையும், நெல்லு தானிய நிறைவையும், மஞ்சள் தொற்று நீக்கியாகவும் கருதப்படும். இந்நாளில் கைவிசேடம் பெறுவது வருடம் முழுவதும் பணப்புழக்கம் ஏற்படுத்தும் என்று நம்புகிறார்கள்.

புனிதரமழான

புதுவருடப் பிறப்பைக் கிராம மக்கள் மிகச் சிறப்பாக் கொண்டாடுவர். பெண்கள் அன்ன ஊஞ்சல் ஆடுவர். உயர்ந்த மரக்கிளையில் ஊஞ்சல் கட்டப்படும். குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் பலகையின் இரு நுனிகளில் நின்று உன்னுவர். பெண்கள் பலகையில் கயிற்றைப் பிடித்திருப்பர். ஊஞ்சல் மேலே உயர்ந்து கீழே வரும்போது ஊஞ்சற் பாட்டுப் பாடுவது, கிராமத்தில் ஒலிக்கும். புது வருடத்தில் ஆண்கள் பல வீர விளையாட்டுக்களில் ஈடுபடுவர். போர்த் தேங்காய் அடித்தல், கிளித்தட்டு மறித்தல், கிட்டி புள் அடித்தல், பட்டம் ஏற்றுதல் போன்ற விளையாட்டுக்கள் ஆண்களால் சவாலாய் விளையாடப்படும்.

நத்தார்

பின்னேரத்தில் மாட்டுச் சவாரி, வாண வேடிக்கை, கரகம், கூத்து போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். வீட்டுக்கு உற்றார் உறவினர் வருவர். தித்திக்கும் பண்டங்கள் உண்பர். புதுவருட வாழ்த்துக்கள் கூறுவர். வீட்டாரும் மன நிறைவாய் புதுவருட வாழ்த்துக்கள் கூறுவர். உறவு வளரும், அன்பு பெருகும், குடும்பத்தில் ஒற்றுமை ஓங்கும். நல்லவர் வாழ்த்து என்றும் புதுவருடத்தில் பலிக்கும். எல்லோரும் நிறைவாய் வாழ்வார். "புதுவருட வாழ்த்துக்கள் நாமும் கூறுவோம்".

வாசித்துக் கலந்துரையாடுக.

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக:

(1) கலாசார விழாக்கள் எவற்றை விளங்க வைக்கும்?

.....

(2) "விழை" என்றால் கருத்தென்ன?

.....

(3) தமிழ் பேசும் மக்களிடையே கொண்டாடப்படும் 3 விழாக்கள் எழுதுக.

.....

(4) புலம் பெயர்ந்த தமிழர் மற்றைய இனங்களின் எவ்வெவ் விழாக்களைக் கொண்டாடுவர்?

.....

(5) இதனாலே எவை வளர்கின்றன?

.....

(6) வெற்றிலையும், நெல்லும் எவற்றைக் குறிக்கும்?

.....

(7) பெண்கள் என்ன கட்டி ஆடுவர்?

.....

(8) அன்று ஆண்கள் விளையாடும் வீர விளையாட்டுக்கள் மூன்று எழுதுக.

.....

(9) பின்னேரத்தில் என்ன நிகழ்ச்சிகள் நடைபெறும்?

.....

2. பின்வரும் சொற்களின் பொருள் விளங்க வசனம் எழுதுக:

(1) விழை : .....

(2) விளை : .....

(3) விலை : .....

(4) அன்ன ஊஞ்சல் : .....

(5) கைவிசேடம் : .....

3. கீழே தரப்பட்ட சொற்களில் உள்ள எழுத்துக்களைச் சரியான கட்டங்களுள் எழுதுக:

சொற்கள்	உயிரெழுத்து		மெய்யெழுத்து		
உயிர்ப்பு	குறில் ஊ	நெடில்	வல்லினம் ப்	மெல்லினம்	இடையினம் ர்
செய்ந்நன்றி				ந்	ய்
அன்பு					
ஆண்மை					
ஐயர்					
ஓட்டு					
வீரம்					
செய்து					
நுங்கு					
மெய்ம்மை					

4. மாறிக்கிடக்கும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொல்லாக்குக:

(1) ல், பொ, க, ப், தை, ங் : **தைப்பொங்கல்**

(2) டு, ளி, த, த், ட், கி :.....

(3) தே, போ, த், ங், கா, ர், ய் :.....

(4) ரி, ச், வா, டு, மா, ட், ச :.....

(5) ம், சே, கை, ட, வி :.....

(6) ந், லை, றி, வெ :.....

5. ஏற்ற சொல்லைப் பின்வரும் சொற்களில் இருந்து தெரிந்தெடுத்து பொருத்தமுறக் கீறிட்ட இடங்களில் எழுதுக:

கிட்டி புள், பின்னேரத்தில், அடிப்பர், ஆடுவர், பெண்கள், ஆண்கள், கொடுப்பர், நல்லவர், பாட்டுப்

(1) **பெண்கள்** ஊஞ்சல் **ஆடுவர்**

(2) ..... போர்த்தேங்காய் .....

(3) ..... கைவிசேடம் .....

(4) பெண்கள் ..... பாடுவர்.

(5) சிறுவர் ..... அடிப்பர்.

(6) மாட்டுச் சவாரி ..... நடைபெறும்.

6. அதே கருத்துள்ள சொற்களையும் எதிர்ச் சொற்களையும் தருக:

	சொல்	அதே கருத்துள்ள சொல்	எதிர்ச் சொல்
(1)	மறி	தடு.....	விடு.....
(2)	விருப்பம்	.....	.....
(3)	உண்டு	.....	.....
(4)	நன்மை	.....	.....
(5)	புகழ்	.....	.....
(6)	உறவு	.....	.....

7. பின்வருவனவற்றின் தமிழாக்கம் தருக:

(1) Festival ..... (2) Money .....

(3) Ancient ..... (4) Paddy .....

(5) Challenge ..... (6) Grain .....

(7) Worship ..... (8) Values .....

(9) Bathing ..... (10) Custom .....

8. ஆங்கிலத்தில் எழுதுக:

(1) மாட்டு வண்டிச் சவாரி..... (2) செல்வம் .....

(3) ஊஞ்சல் ..... (4) பின்னேரம் .....

(5) புத்தாடை ..... (6) விளையாட்டுக்கள்.....

(7) புத்தாண்டு ..... (8) களிப்பு .....

(9) நம்பிக்கை..... (10) கழிப்பு .....

பாடம் - 11

கடிதம் எழுதுதல்

எங்களுடைய செய்திகளை மற்றவர் அறியக் கடிதம் எழுதுவோம். கடிதம் அன்பை வெளிப்படுத்த எழுதுவார்கள், சுகம் அறிய எழுதுவார்கள், வேறு செய்திகளை அறிவிக்கவும் எழுதுவார்கள். கடிதங்கள் பலவகைப்படும். அவற்றிலே உறவுமுறைக் கடிதம் எழுதுவதை அறிவோம்.

215, காசியோபறி வீதி,
வாற்போட்,
இலண்டன்,
ஐக்கிய இராச்சியம்.
2008/01/10.

எனது அருமைத் தோழி கனிமொழி,

நாங்கள் நலமாய் இருக்கிறோம். உங்களது கடிதம் நேற்றுக் கிடைத்தது. உங்கள் எல்லோரதும் சுகம் அறிந்து மகிழ்ந்தேன்.

ஈழத்தில் நல்லூர்த் தேர்த் திருவிழாபற்றி எழுதியிருந்தீர். எனக்கும் அதைப் பார்க்க ஆசை. அடுத்த வருடம் அப்பா என்னையும் அழைத்து வருவார். நான் இருக்கும் நாட்டின் இடங்கள் பற்றிக் கேட்டிருந்தீர். இம்முறை இலண்டனில் உள்ள 'கீத்ரோ' விமான நிலையம் பற்றி எழுதுகின்றேன். நீர் இங்கு வரும்போது முதலில் பார்க்கும் இடம் அதுதானே!

'கீத்ரோ' விமான நிலையம் உலகின் மூன்றாவது பெரிய விமான நிலையம். அது அதிகளவு பயணிகள் வந்து போவதில் முதலாம் இடத்தில் இருக்கிறது. ஒரு வருடத்தில் சராசரியாக 800 இலட்சம் பயணிகள் பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்து போகின்றனர்.

'கீத்ரோ' விமான நிலையம் 1930ல் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இது விமானம் கட்டுவதற்கும், பரீட்சித்துப் பார்ப்பதற்கும் உதவியது. 1946ஆம் ஆண்டிலிருந்து பயணிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இங்கு பல நவீன வசதிகள் உண்டு. இங்கு ஐந்து பயணிகள் தரிப்பு நிலையங்கள் (Terminals) உள்ளன. இவை எல்லாம் கண்கொள்ளாக் காட்சி. இங்கிருந்து போய்வர பேருந்து, தொடருந்து சேவைகள் உண்டு. இவை பயணிகளுக்குப் பெரிய உதவியாகும்.

ஊரிலே எமது நண்பர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் சுகமறிய ஆசை. உம்மை, இந்த விமான நிலையத்தில் விரைவில் சந்திப்பேன், என எண்ணுகிறேன். எல்லோருக்கும் என் வாழ்த்துக்கள்.

அன்புத் தோழி,
தேன்மொழி.

1. கலந்துரையாடிய பின் கேள்விகளுக்கு விடை எழுதுக:

(1) ஏன் கடிதம் எழுதுவோம்? .....

(2) இக் கடிதம் எவ்வகைகளில் ஒன்று? .....

(3) வலது மூலையில் என்ன முதல் எழுதப்படும்? .....

(4) அதன் கீழ் ஆண்டுடன் என்ன எழுத வேண்டும்? .....

(5) முதலில் யாரை விளித்து எழுதியுள்ளது? .....

(6) தொடர்ந்து யார் நலம் கூறி எழுதப்பட்டது? .....

(7) 'கீத்ரோ' விமான நிலையம் எத்தனையாம் இடத்தை உலகில் பிடித்துள்ளது?

.....

(8) அது அதிகளவு பயணிகள் வந்து போவதில் எத்தனையாவது இடம்? .....

(9) "கீத்ரோ" விமான நிலையம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? .....

(10) ஆரம்பத்தில் எதற்காக ஆரம்பிக்கப்பட்டது? .....

2. ஆங்கிலத்தில் எழுதுக:

(1) விமான நிலையம் .....

(2) செய்தி .....

(3) ஊடகம் .....

(4) கடிதம் .....

(5) தேர்த்திருவிழா .....

(6) சராசரி .....

(7) பயணிகள் .....

(8) தரிப்பு நிலையம் .....

(9) பேருந்து .....

(10) பயணிகள் .....

3. எதிர்க் கருத்துள்ள சொல் எழுதுக.

(1) ஒன்று ..... (6) அதிகம் .....

(2) உறவு ..... (7) முடிவு .....

(3) நேற்று ..... (8) உண்டு .....

(4) மகிழ்ந்தேன் ..... (9) சிறப்பு .....

(5) முதல் ..... (10) விரைவாய் .....

4. ஒத்த கருத்துள்ள சொல் எழுதுக.

(1) அன்பு ..... (6) பல .....

(2) உறவு ..... (7) ஆண்டு .....

(3) அழைத்தல்..... (8) உண்டு .....

(4) கேட்டல் ..... (9) சமயம் .....

(5) பெரிய ..... (10) எண்ணம் .....

5. 'கீத்ரோ' விமான நிலையம் பற்றி 5 வசனம் எழுதுக:

(1) .....

(2) .....

(3) .....

(4) .....

(5) .....

வீட்டுவேலை

1. சதுரத்தில் உள்ள எழுத்துக்களால் ஆக்கக் கூடியளவு சொற்கள் எழுதுக:

பு	ல	ம்
ந	அ	ண்
ற	ப	ன்

உதாரணம்: 1. அன்பு

2. .....
3. .....
4. .....
5. .....
6. .....
7. .....
8. .....
9. .....
10. .....

2. நீர் விரும்பிய உறவுக் கடிதம் ஒன்று எழுதுக:

.....
.....
.....
.....

.....

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

.....
.....

பாடம் - 12

ஊடகங்கள்

செய்திகள், தகவல்கள், விளம்பரங்கள் போன்றவற்றைப் பொதுமக்களுக்கு அறியத்தரும் தொடர்பு சாதனங்களே ஊடகங்கள் எனப்படும். ஊடகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படும் தொடர்பு சாதனங்கள் உரோம இராச்சியத்தில் பேரரசன் யூலியசீசர் காலத்திலிருந்தே வளர்ச்சியடையத் தொடங்கிவிட்டன. அக்காலத்தில் கல்வெட்டுக்கள், மரத்துண்டுகள் உலோகத் தகடுகள் போன்றவற்றில் எழுதப்பெற்ற அரச அறிவித்தல்கள் பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டன. இத் தகவல் சரித்திர ஆய்வுகள் மூலம் எமக்குத் தெரியவருகின்றது. ஆதி காலத்தில் தோற்கருவிகள் மூலமும் செய்திகள் அறிவிக்கப்பட்டன.

சீனாவில் 8ஆம் நூற்றாண்டளவில் பட்டுத் துணிகளில் எழுதப்பட்டு, கழுகு, புறா போன்ற பறவைகள் மூலமும் செய்திகள் பரிமாறப்பட்டன. யேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் 15ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்பு சாதனங்கள் வளர்ச்சி அடையத்தொடங்கின. அவற்றில் ஒன்றான செய்தி இதழ்களின் வடிவம் படிப்படியாகச் சிறப்பாக வளர்ச்சி அடைந்தது. இதன் காரணமாக இங்கிலாந்திலிருந்து முதலாவது வாராந்த இதழ் 1622ஆம் ஆண்டிலும் முதலாவது தினசரிப் பத்திரிகை 1702ஆம் ஆண்டிலும் வெளிவந்தன.

ஊடகங்களின் பாரிய வளர்ச்சிக்கு 1886ஆம் ஆண்டுக்குப் பின் பாவனைக்கு வந்த அச்சு இயந்திரங்கள் மிகவும் அனுசரணையாக இருந்ததும் முக்கிய காரணமாகும்.

இந்த நூற்றாண்டில் ஊடகச் செய்திகள் மிக விரைவில் பொதுமக்களைச் சென்றடைகின்றன. அதற்குக் காரணம் அச்சுப் பதிப்பு, ஒலிபரப்பு, தொலைக்காட்சி போன்ற நவீன தொழில்நுட்ப வளர்ச்சியாகும். இவற்றால் செய்திகளும், தகவல்களும் செய்மதிக்கூடாகவும் அனுப்பக்கூடியதாக இருக்கிறது. பத்திரிகைகள், சஞ்சிகைகள், செய்திகள் கணினி மூலமாக மக்கள் பார்வைக்கு உடனுக்குடன் கிடைக்கின்றது. அதனால் உலகம் சுருங்கிவிட்டது என நாம் குறிப்பிடுகிறோம்.

1. பயிற்சிகள்:

1. ஊடகங்கள் என்றால் என்ன?

.....

2. ஊடகங்களின் பெயர்கள் சில கூறுக.

.....

3. யூலியசீசர் எந்த இராச்சியத்தில் பேரரசனாக இருந்தார்?

.....

4. யூலியசீசர் காலத்தில் செய்திகளை எவ்வாறு பரப்பினார்கள்?

.....

5. சீனாவில் முற்காலத்தில் செய்திகளை எவ்வாறு அறிவித்தார்கள்?

.....

6. ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

.....

7. ஐரோப்பிய நாடுகளில் 15ஆம் நூற்றாண்டில் இருந்து வளர்ச்சி பெற்ற ஊடகச் சாதனம் யாது?

.....

8. அதன் வளர்ச்சிக்கு அனுசரணையாக இருந்தது யாது?

.....

9. உலகச் செய்திகள் உடனுக்குடன் எங்களை எவ்விதம் வந்தடைகின்றன?

.....

10. 'உலகம் சுருங்கி விட்டது' என்பதன் பொருள் யாது?

.....

2. பின்வரும் ஒருமைச் சொற்களைப் பன்மையாக்குக:

(1) கல்வெட்டு .....

(2) தொலைபேசி .....

(3) சஞ்சிகை .....

(4) செய்மதி .....

(5) இதழ் .....

3. சரியான சொற்களின் கீழ்க் கீறிடுக:

(1)	வனொலி	வானொலி	வானோலி
(2)	தொலைக்காட்சி	தொலைக்கட்சி	தொலக்காட்சி
(3)	கால்வேட்டு	கல்வட்டு	கல்வெட்டு
(4)	பத்தரிகை	பத்திரிகை	பத்திரிகய்
(5)	தொலைபேசி	தொலபேசி	தொலைபேசி

4. சரியான சொற்களை அம்புக்குறியிட்டுப் பொருத்துக:

(1) தொலைபேசியாற் — பார்க்கலாம்

(2) வானொலி — படிக்கலாம்

(3) பத்திரிகை — கேட்கலாம்

(4) தொலைக்காட்சி — பேசலாம்

5. பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக:

(1) பத்திரிகை .....

(2) வானொலி .....

(3) தொலைக்காட்சி .....

(4) தொலைபேசி .....

(5) கணினி .....

வீட்டுவேலை

6. பின்வரும் சொற்களை வட்டம் போட்டுக் காட்டுக:

க	ல்	வெ	ட்	டு	ப
ணி	ஊ	இ	த	ழ்	த்
னி	ட	செ	ய்	ம	தி
சி	க	வா	னொ	லி	ரி
பே	ம்	ச	ஞ்	சி	கை
லை	செ	ய்	தி	க	ள்
தொ	லை	க்	கா	ட்	சி

பத்திரிகை	கல்வெட்டு
கணினி	ஊடகம்
செய்மதி	வானொலி
சஞ்சிகை	தொலைபேசி
செய்திகள்	தொலைக்காட்சி
இதழ்	மதி
திரி	மலி
தொலை	கல்

பாடம் - 13

கதை:

ஆடும் சிங்கமும்



ஒருநாள் ஓர் ஆடு மலையின் அடிவாரத்தில் நின்று புல் மேய்ந்துகொண்டிருந்தது. அப்போது திடீரெனப் பலமான காற்று வீசியது; கார் மேகங்கள் வானத்திலே சூழ்ந்தன. தொடர்ந்த மின்னலும் இடியோசையும் எல்லா மிருகங்களையும் பயங்கொள்ளச் செய்தன. பலமாகக் காற்று வீசியது. பெருமழை பெய்தது. காட்டு விலங்குகளும், பறவைகளும் தம் இருப்பிடங்களை நோக்கி விரைந்தன. இவற்றைக்கண்ட ஆடு அஞ்சி நடுங்கி அருகில் இருந்த மலைக் குகைக்குள் சென்றது. மழை நின்றதும் தனது இருப்பிடம் செல்ல எண்ணியது.

மழை விடாமல் தொடர்ந்து பெய்துகொண்டேயிருந்தது. வெளியே செல்ல முடியாத ஆடு குகையினுள் இருந்த மேடையில் ஏறிப் படுத்துக்கொண்டது. அதன் கொம்புகள் சுருண்டு இருந்தன; உடல் முழுவதும் உள்ள மயிர் அடர்ந்து கருமை நிறமாகக் காணப்பட்டது; முகத்தில் நீண்ட தாடியும் பெரிய தலையும் உடையதாகப் பயங்கரமாக இருந்தது. அதன் கழுத்தில் ஒரு மணி தொங்கியது. ஆடு அயர்ந்து தூங்கிவிட்டது. சிறிது நேரத்தில் குகையினுள் வழக்கமாகத் தங்கும் சிங்கம் வந்தது. இருளில் பயங்கரமான தோற்றத்துடன் எதுவோ தனது இடத்தில் படுத்திருப்பதைக் கண்ட சிங்கம் "யார் நீ? நான் வசிக்கும் குகையில் உனக்கு என்ன வேலை?" என்று சற்றுத் தயக்கத்துடன் கேட்டது.

சிங்கத்தின் தயக்கத்தைக் கண்ட ஆடு என்ன செய்வதென்று ஒரு கணம் சிந்தித்தது. மறுகணம் தன் குரலை மாற்றிக்கொண்டு "ஓ! சிங்கராசாவா! நான்தான் தாடி வீரன். வாருங்கள் உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனது விரதம் இன்றோடு நிறைவேறப் போகின்றது. இதுவரை நூறு புலிகளையும், நூறு யானைகளையும் கொன்று தின்றுவிட்டேன். ஒரு சிங்கம் மட்டும் கிடைக்கவில்லை. நீர் என்னைத் தேடி வந்ததற்கு மிக்க நன்றி. நீர் உள்ளே வருகிறீரா? அல்லது நானே வெளியில் வரட்டுமா" என்று எழுந்து நின்று தனது தனது உடலைக் குலுக்கியபடி கேட்டது. குகையின் சுவர்களில் அந்தச் சத்தம் மணியொலியுடன் சேர்ந்து பயங்கரமாக எதிரொலித்தது.

சிங்கம் அச்சத்தினால் பயந்து ஓடத்தொடங்கியது. இதனைக் கண்ட நரி ஒன்று "அரசே! ஏன் ஓடுகிறீர்கள்?" என்று கேட்டது. சிங்கம் நடந்தவற்றை விபரமாகக் கூறியது. இதனைக் கேட்ட நரி சிரித்தபடி "அரசே! நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அது ஓர் ஆட்டுக்கடா போல் இருக்கிறது. ஓர் அரசன் இப்படிப் பயந்து ஓடலாமா? நானும் உங்களுடன் வருகிறேன். வாருங்கள் குகையினுள் சென்று பார்ப்போம். உங்களுக்கு அச்சமாக இருந்தால் என்னுடைய வாலுடன் உங்களுடைய வாலையும் சேர்த்துக் கட்டிக்கொள்ளுங்கள்" என்றது.

சிங்கம் நரி சொல்வதில் உண்மை இருப்பதுபோல் உணர்ந்தது. நரி கூறியபடியே அவை வால்களைக் கட்டிவிட்டுக் குகையை நோக்கிச் சென்றன. மீண்டும் சிங்கம் நரியுடன் வருவதைக் கண்ட ஆடு தான் தனது அறிவின் துணை கொண்டே அவைகளை வெல்லவேண்டும் என எண்ணியது. சிறிது யோசித்துவிட்டு "நரியாரே! நல்லது செய்தீர். ஓடிய சிங்கத்தை அழைத்து வாரும் என்றால் இழுத்து வருகிறீரே. நீர்தான் உண்மையான மந்திரி. எனது விரதமும் இன்றோடு முடியப்போகிறது" என்று கூறித் தலையை மீண்டும் அசைத்தது. கழுத்திலிருந்த மணியும் பலமாக ஒலித்தது.

அதைக்கேட்ட சிங்கம் நடுநடுங்கியது. "ஐயையோ! நான் ஏமாந்துவிட்டேனே! குள்ள நரி என்னை ஏமாற்றிக் கொண்டுவந்துவிட்டதே!" என்று எண்ணியபடி திரும்பி ஓடத்தொடங்கியது. அதே வேகத்தில் நரியால் ஓட முடியவில்லை. கற் பாறைகளிலும், மரங்களிலும் மோதி நரி இறந்துவிட்டது.

தனது புத்திக் கூர்மையால் சிங்கத்திடமிருந்து உயிர் தப்பிய ஆடு, விரைவாக ஓடித் தனது வீடுபோய்ச் சேர்ந்தது.

1. பிள்ளைகள் கதை கேட்கவும், மீண்டும் அவர்கள் கூறவும் செய்யத் தூண்டியபின் வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவிக்குக.

(1) ஆடு எங்கே புல் மேய்ந்தது?

.....

(2) காற்று வீச எவை வானத்திலே சூழ்ந்தன?

.....

(3) காட்டு விலங்குகளும் பறவைகளும் ஏன் இருப்பிடம் தேடி விரைந்தன?

.....

(4) ஆடு எங்கே சென்றது?

.....

(5) ஆடு சென்ற இடத்தில் வழக்கமாக எது தங்கும்?

.....

(6) எது பயங்கரமான தோற்றமுடையது?

.....

(7) சிங்கம் ஏன் தயக்கத்துடன் கேட்டது?

.....

(8) ஆடு என்ன கூறியது?

.....

(9) "அரசே! ஏன் ஓடுகிறீர்கள்" என்று யார் கேட்டது?

.....

(10) நரி "உங்களுக்குப் பயமென்றால், இரண்டு வால்களையும் கட்டிச் செல்வோம்" என்று ஏன் சொன்னது?

.....

(11) ஆடு எப்படித் தந்திரமாய்க் கேட்டது?

.....

(12) அதைக் கேட்ட சிங்கம் என்ன செய்தது?

.....

(13) நரி எப்படி இறந்தது?

.....

(14) ஆடு எதனால் சிங்கத்தை வென்றது?

.....

(15) புத்திமான் என்ன ஆவான்?

.....

2. ஒத்த கருத்துள்ள சொற்கள் எழுதுக:

(1) சிங்கம் .....
(2) வானம் .....
(3) விலங்கு .....
(4) கருமை .....
(5) வீரன் .....
(6) புத்திசாலி .....
(7) சிரிப்பு .....
(8) அச்சம் .....
(9) சிறிது .....
(10) முழுவதும் .....

3. எதிர்ச் சொல் தருக:

(1) கருமை .....
(2) வீரன் .....
(3) சிரிப்பு .....
(4) இருள் .....
(5) உள்ளே .....
(6) சிரித்தது .....
(7) சேர்தல் .....
(8) அடர்த்தி .....
(9) வா .....
(10) பயம் .....

4. பாடத்தில் உள்ள பத்து பெயர்ச்சொற்கள் எழுதுக:

(1) .....
(2) .....
(3) .....
(4) .....
(5) .....
(6) .....
(7) .....
(8) .....
(9) .....
(10) .....

5. ஏற்ற பெயர்ச் சொல்லை இடைவெளிகளில் எழுதுக:

(1) ..... வீசியது. (2) ..... மின்னியது.

(3) ..... பெய்தது. (4) .....பறந்தன.

(5) ..... மேய்ந்தது.(6) ..... ஓசை கேட்டது.

(7) ..... நடுங்கியது.(8) ..... ஓடியது.

(9) ..... மேடையில் படுத்தது.

(10) ..... புத்தியால் வென்றது

6 கீழேயுள்ள சொற்களில் மறைந்துள்ள பல சொற்களைக் கண்டெழுதுக. எழுத்துக்களை இடம் மாற்றி எழுதலாம்.

உதாரணம்: கனடாக்கொடி

(1) கனடா (2) கடா (3) கடி (4) கொடி
(5) கன கொடி (6) கொடாக் கொடி.

(1) அறிவாலயம் (2) உத்தம புத்திரன்

வீட்டுவேலை

7. ஆங்கிலச் சொல் எழுதுக:

(1) தாடி ..... (2) மேய்தல் .....

(3) மலை ..... (4) கர்ச்சித்தல் .....

(5) பயம் ..... (6) நூறுயானைகள்.....

(7) குகை ..... (8) உண்மை .....

(9) மந்திரி ..... (10) மணியொலி .....

8. இக்கதையிலே உமக்குப் பிடித்த மிருகம் எது? ஏன்?

.....

.....

.....

9. சிங்கத்தைப் பற்றி ஒவ்வொன்றும் 4 சொற்களுக்கு குறையாத ஐந்து வசனங்கள் எழுதுக:

1. .....

2. .....

3. .....

4. .....

5. .....

பாடம் - 14

ஆறுவது சினம்

பழம்பெரும் புலவரான ஔவையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நன்னெறி போன்ற சிறந்த நூல்களைப் பாடியுள்ளார். அவர் பாடிய ஆத்திசூடி நூல் நூற்றியெட்டு வரிகளைக் கொண்டது. அகர வரிசையில் தொடங்கி ஔகார வரிசை வரையுள்ள பன்னிரண்டு வரிகளை அறிவோம். முன்பு நீங்கள் அவற்றைப் படித்திருப்பீர்கள். அப்பாடலிலே உள்ள சிறப்பை அறிவோம். ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு படிப்பினை தரும். ஓரளவு ஓசை நயத்துடன் இரண்டு அல்லது மூன்று சொற்களால் அமையப் பாடப்பெற்றது. நினைவில் வைத்திருக்க இலகுவாய் இருக்கும்.

அறம் செய்ய விரும்பு, ஆறுவது சினம் என வரிகள் அகர வரிசையில் வளர்கின்றன. "ஆறுவது சினம்" என்ற இரண்டாம் வரி கூறும் படிப்பினை எல்லோருக்கும் உதவும். அது இன்றும் என்றும் உதவும்.

சினம் என்றால் கோபம். கோபத்தை ஆற்ற வேண்டும் என்பது அதன் பொருள். நாங்கள் கொதிக்க வைத்த தேநீரை ஆற்றுவோம். கொதிநீர் ஆறாது விட்டால் குடிக்க முடியாது. அது நாவையும் சொண்டுகளையும் சுட்டுவிடும். கோபமும் கொதிநீர் போன்றதாகும். இது எம்மையும் சுட்டு, எமக்கு அருகில் நிற்பவரையும் சுட்டுவிடும். இதைக் கொழுக்கட்டைக் கண்ணனின் கதை நன்கு விளக்கும்.

கொழுக்கட்டைக் கண்ணனின் மனைவி தங்கம். அவன் தங்கத்தின் தாய் பொன்னியின் வீட்டுக்குச் சென்றான். மருமகனைக் கண்ட மாமி பொன்னி, இனிமையான கொழுக்கட்டை அவித்துக் கொடுத்தாள். "இது என்ன?" என்று மாமியாரிடம் கேட்டான். அவள் "இது கொழுக்கட்டை" என்றாள். அதற்கு முன்

கொழுக்கட்டை உண்டு அறியாத கண்ணன் தன் வீடு சென்றதும் தன் மனைவியிடம் கூறிக் கொழுக்கட்டை கண்ணன் தனது வீட்டுக்கு வரும்போது "கொழுக்கட்டை. கொழுக்கட்டை" என்று மனத்துக்குள் கூறி வந்தான். வழியில் ஓர் ஆற்றைக் கடந்தான். அவன் அப்போது அதை மறந்து "ஆற்றுக்கட்டை, ஆற்றுக்கட்டை" எனச் சொல்லிவந்தான். வீடு வந்தவுடன் "தங்கம், தங்கம் எனக்கு ஆற்றுக்கட்டை செய்து தா" என்றான். அவள் தனக்கு ஆற்றுக்கட்டை செய்யத் தெரியாது என்றதும் கோபம் கொண்டான். அங்கிருந்த தடியால் அவளை ஓங்கி அடித்தான். அடித்த இடத்தில் வீக்கம் ஏற்பட்டது. தங்கம் "ஐயோ, எனது கை கொழுக்கட்டை போல் வீங்கிவிட்டதே" என்று கூறி அழுதாள். உடனே கண்ணன், "மன்னித்து விடு" என்று கூறி, "எனக்கு அதுதான் வேண்டும் அதுதான் வேண்டும்" என்றான்.

1. பின்வரும் கேள்விகளைக் கேட்போம், உரையாடுவோம், பின்பு விடை எழுதுவோம்.

(1) எத்தனை ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்ப் பாடல்கள் பாடிவருகிறார்கள்?

.....

(2) இன்று தமிழ்ப் பாடல்களை எங்கெங்கு கேட்கலாம்?

.....

(3) பாடல்கள் கேட்க எப்படி இருக்கும்?

.....

(4) அவைகள் வாழ்வுக்கு என்ன தரும்?

.....

(5) பழைய பெரும் புலவர்களில் ஒருவர் யார்?

.....

(6) அவர் பாடிய நூல்கள் இரண்டெழுதுக.

.....

(7) கோபத்தை ஆற்றுக என்ற ஆத்திசூடியின் வரியை எழுதுக:

.....

(8) ஆத்திசூடியின் சிறப்பென்ன?

.....

(9) "கொதிநீர்" ஆகக் கோபத்தைப் கூறுதல் சரியா? ஏன்?

.....

(10) கோபம் எதனைத் தேடும்?

.....

2. விரும்பிய பிள்ளைகளைக் கதைகூற விடுக:

(ஆசிரியர் அதைக் கூறும் போதும் கேட்கும் போதும் ஏற்ற முகபாவனைகளைக் காட்டுதல், பிள்ளைகள் காட்டும் முகபாவனைகளையும் ஏற்று அங்கீகரித்தல் சிறப்பாகும். எல்லாப் பிள்ளைகளையும் கதை கூறத் தூண்டுக.

3. கீழே தரப்பட்ட சொற்களையோ, சொற்றொடர்களையோ ஏற்ற இடைவெளிகளில் எழுதுக:

தங்கம், இனிமையாய், என்றாள், "ஆற்றுக்கட்டை ஆற்றுக்கட்டை", மறந்து. விளங்கவில்லை, பாவத்தைத், மாமியார், மன்னிப்புக், கொழுக்கட்டை, என்ன, கூறிக்கொண்டே, சினம், கொழுக்கட்டைபோல், தேடும், அடித்தான்.

(1) கண்ணன் .....வீட்டுக்குச் சென்றான்.

(2) அவனுடைய மனைவி பெயர் ..... .

(3) மாமியார் கொடுத்த உணவு ..... ஆகும்.

(4) அது அவனுக்கு மிக ..... இருந்தது.

(5) அவன் மாமியாரிடம் "..... உணவு?" என்று கேட்டான்?

(6) அவள் "அது கொழுக்கட்டை" ..... .

(7) வீடு வரும்போது மனதுக்குள் .....
எனக் கூறிவந்தான்.

(8) அவன் ஆற்றைக் கடக்கும் போது மறந்து விட்டான் பின்பு ".....
....." என்று சொல்லி வந்தான்.

(9) மனைவி தங்கத்துக்கு அவன் கூறிய உணவு .....

(10) அவள் உணவு செய்யாது யோசிக்க கண்ணனுக்குக் ..... ஓங்கியது.

(11) கட்டையால் ..... .

(12) அவள் அழுது கொண்டு "..... ..... வீங்கிவிட்டது" என்றாள்.

(13) கண்ணன் "....." கேட்டான்.

(14) "கோபம் ..... தேடும்".

4. ஒத்த கருத்துள்ள சொல் எழுதுக:

(1) சினம் .....
(2) விரும்பு .....
(3) அடிக்கடி .....
(4) பழைய .....
(5) சிறந்த .....
(6) முதல் .....
(7) நல்லது .....
(8) மனைவி .....
(9) உணவு .....
(10) சென்றான் .....

5. எதிர்க் கருத்துள்ள சொல் எழுதுக:

(1) விரும்பு .....
(2) பழைய .....
(3) முதல் .....
(4) சென்றான் .....
(5) இனிப்பு .....
(6) உண்டு .....
(7) அமையும் .....
(8) ஆற்றுதல் .....
(9) முன்பு .....
(10) மறதி .....

6. பின்வரும் வாக்கியங்களை 'நீ', 'அவன்' என்பதற்கு ஏற்றவாறு எழுதுக:

நான்	நீ	அவன்
கோபிக்க மாட்டேன்.		
கோபத்தால் பாவம் தேடினேன்.		
நண்பர்களை இழந்தேன்.		
"யாருக்கு கோபம் தேவை?" என்று என்னையே கேட்டேன்.		
இப்படி பலமுறை கேட்டுக் கோபத்தை ஆற்றினேன்		

7. 1. பிரித்தெழுதுக:

(1). இனிமையாகும் = ... + ...
(2). தமிழ்ப்பாடல் = ... + ...
(3). உயிரெழுத்து = ... + ...
(4). ஔவையார் பாடல் = ... + ...
(5). எழுதியுள்ளார் = ...+ .....

7. 2. சேர்த்தெழுதுக:

(1). ஓங்கு + சினம் = ...
(2). சொல் + கள் = ...
(3). என்று + அறிய = ...
(4). ஓர் + அளவு = ...
(5). பல + முறை = ...

8. பாடலை வாசித்த பின் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக:

உள்ளம் கவர்ந்தெழுந் தோங்குசினம் காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க – வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. (ஔவையார்)

(1). இது யார் எழுதிய பாடல்?.....
(2). காலையில் எப்படி எழுதல் வேண்டும்? .....
(3). எதைக் காக்க வேண்டும்? .....
(4). எது சிறந்த குணம்? .....
(5). வெள்ளம் வந்தால் என்ன செய்ய வேண்டும்? ஏன்? .....

வீட்டு வேலை

9.1 சதுரத்தில் உள்ள எழுத்துக்களால் ஆக்கக் கூடியளவு சொற்கள் எழுதுக:

பா	அ	னு
ல்	சி	ட
ம்	ரி	மா

உதாரணம்: 1. பாடல்

2. பா

3. .....

4. .....

5. .....

6. .....

7. .....

8 .....

9. .....

10. .....

11. .....

12. .....

9.2 நேரிசை வெண்பா (பெற்றோருடன் கலந்துரையாடி விடை எழுதுக:)

ஆற்று சினமென்ற ஔவை அருள்மொழியை
ஏற்றுப் புகழ்வாழ்வு எய்திடுவீர் - ஏற்காது
கோபக் கொதிநீரைக் குன்றவே போற்றியே
ஆபத்தை நீக்குதலே ஆசு.

கருத்து:- குன்றுதல் - குறைதல், எய்துதல் - பெறலாம்,
அருள்மொழி(Divine words) புனிதவார்த்தை, ஆசு - பற்றுக்கோடு.

(1). ஔவை அருள்மொழி என்ன?

.....

(2). எதனை ஏற்றால் புகழ் வாழ்வு வரும்?

.....

(3). கொதிநீரை எப்படி குன்றச் செய்யலாம்?

.....

(4). இதனால் எது நீங்கும்?

.....

(5). இப்பாட்டு உமக்கு ஏன் பிடிக்கிறது - பிடிக்கவில்லை?

.....

10. ஆங்கிலச் சொல் தருக:

(1) மனம் ..... (2) தடுத்தல் .....

(3) கோபம் ..... (4) கரை .....

(5) காத்தல் ..... (6) விடுதல் .....

(7) குணம் ..... (8) அரிது .....

(9) வெள்ளம் ..... (10) விளம்பு .....

பாடம் - 15

பார்த்து இரசித்த விளையாட்டு விழா

எங்கள் தமிழ்ப் பாடசாலையில் ஆண்டுதோறும் பல கொண்டாட்டங்கள் நடைபெறும். அவற்றிலே சிறப்புடையது வருடாந்த விளையாட்டுப் போட்டியாகும். அது பெரிய விழாவாக நடைபெறும். இவ்விழா ஒவ்வோர் ஆண்டும் ஆடி மாதம் கொண்டாடப்படும். இந்த ஆண்டும் ஆடி மாதம் எமது பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நிகழ்ந்தது. அன்று மதியம் பன்னிரண்டு மணியளவில் அவ்விழா தொடங்கியது.

அன்று விளையாட்டு மைதானம் அழகாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அதனைச் சூழவரப் பல வண்ணக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. அவை பல நிறப் பறவைகள் பறப்பதுபோல் தோற்றமளித்தன. மைதானத்தின் நடுவே பச்சையும் மஞ்சளும் சேர்ந்த பாடசாலையின் கொடி வானளாவப் பறந்தது. அதன் அயலில் இல்லங்களின் கொடிகள் காணப்பட்டன. அவை ஒவ்வொரு இல்லத்துக்குரியவை. பச்சை, மஞ்சள், நீலம் என்னும் நிறங்களைக் கொண்டவை. அந்தக் கொடிகள் எல்லாம் மக்களை "வாருங்கள், வந்து பாருங்கள்" எனக் கைகாட்டி அழைப்பது போலக் காற்றில் அசைந்தன.

மைதானத்தின் தென் திசையிலே இல்லங்களுக்குரிய மூன்று பந்தல்கள் காட்சியளித்தன. அவற்றுள் ஒன்று நாவலர் இல்லம். அதற்குரிய நிறம் பச்சை. அவ்வில்லத்தை பச்சை இலைகள் கொண்டு கோபுரம் போல கட்டி அலங்கரித்திருந்தார்கள். மற்றையது விபுலானந்தர் இல்லம் அதற்குரிய நிறம் மஞ்சள். மஞ்சள் நிறத்துணிகளால் அழகிய வீடு போல அலங்கரித்திருந்தார்கள். மூன்றாவது இல்லம் நீல நீல நிறமுடையது அது தனிநாயகம் அடிகள் இல்லமாகும்.

சரியாகப் பன்னிரண்டரை மணிக்குப் பிரதம விருந்தினரும் அவரது பாரியாரும் வந்து சேர்ந்தனர். அவர்களை அதிபர் வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

முதலில் ஓட்டப் பந்தயங்கள் நிகழ்ந்தன. அதனை அடுத்து குண்டெறிதல், பரிதி வட்டம் வீசுதல் நடைபெற்றன. அப்போது இன்னொரு இடத்தில் உயரம் பாய்தல், நீளம் பாய்தல் போட்டிகள் நிகழ்ந்தன. அத்துடன் பல அஞ்சலோட்டப் போட்டிகளும் நடைபெற்றன. இறுதியில் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற கயிறிழுத்தல் போட்டியும், விநோத உடைப் போட்டியும் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன.

மாலை ஆறு மணியளவில் போட்டிகள் முடிவடைந்தன. அதன் பின் பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. வெற்றி வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் பிரதம விருந்தினரின் பாரியார் பரிசில்களை வழங்கினார். அன்றைய போட்டியிலே நாவலர் இல்லமே முதலிடம் பெற்றது. அதற்கு மிகப் பெரிய வெற்றிக் கிண்ணம் பரிசாக வழங்கப்பட்டது. மாணவர்களின் ஆரவாரம் விண்ணை முட்டியது. பின்னேரம் ஏழு மணியளவில் பாடசாலைக் கீதத்துடன் விளையாட்டுப் போட்டி நிறைவுற்றது.

1.

(1) இங்கு குறிப்பிட்ட பாடசாலையில் விளையாட்டு விழா எந்த மாதத்தில் நடைபெறும்?

(2) பாடசாலையின் கொடியின் நிறங்கள் என்ன?

(3) பாடசாலையில் எத்தனை இல்லங்கள் உண்டு?

(4) இறுதியாக நடைபெற்ற போட்டிகள் எவை?

(5) இந்த ஆண்டு எந்த இல்லம் வெற்றி பெற்றது?

2. பின்வரும் சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் தருக:

(1) உறக்கம் - ..... பெருக்கம் - .....

(2) ஆத்திரம் - ..... கொடுங்கோல் - .....

(3) அவமானம் - ..... மேடு - .....

(4) கோடை - ..... சரி - .....

(5) ஏறு - ..... காலை - .....

3. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்கள் தருக:

(1) புதல்வன் - .....

(2) அன்னை - .....

(3) வீடு - .....

(4) போனான் - .....

(5) அரசன் - .....

(6) நண்பன் - .....

(7) யுத்தம் - .....

(8) இரத்தம் - .....

(9) ஆபரணம் - .....

(10) இலாபம் - .....

4. பின்வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக எழுதுக:

உ+ம் :- தம்பி கேள்வி கேட்டான்.

கேள்வி தம்பியால் கேட்கப்பட்டது.

(1) இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தினை இயற்றினார்.

(2) இராமன் இலங்கை வேந்தனைக் கொன்றான்.

(3) ஆசிரியர் கணிதம் கற்பித்தார்.

(4) வேடன் வேட்டை ஆடினான்.

(5) அம்மா கறி சமைத்தார்.

5. கீழ்வரும் செயப்பாட்டு வினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாக்குக:

உ+ம் :- சிலை சிற்பியால் செதுக்கப்பட்டது.

சிற்பி சிலையைச் செதுக்கினான்.

(1) மலர்கள தமயந்தியால் பறிக்கப்பட்டன.

(2) வேய்ங்குழல் கண்ணனால் ஊதப்பட்டது.

(3) தைப்பொங்கல் தமிழர்களால் கொண்டாடப்படுகிறது.

(4) சாப்பாடு சமயற்காரனால் சமைக்கப்படுகிறது.

(5) பாடம் ஆசிரியரினால் கற்பிக்கப்படுகிறது.

6. கீழ்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக:

உ+ம் :- தோடை + பழம் = தோடம்பழம்

பொன் + காப்பு = பொற்காப்பு

(1) ஆண்டு + ஆண்டு =

(2) புளி + பழம் =

(3) வேம்பு + பழம் =

(4) மாதுளை + பழம் =

(5) ஆறு + கரை =

7. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக:

(1) பன்னிரண்டு = ... + ...

(2) வாழைப்பழம் = ... + ...

(3) வட்டப்பலகை = ... + ...

(4) தேங்காய் = ... + ...

(5) பனம் பழம் = ... + ...

8. ஆங்கிலத்தில் எழுதுக:

(1) விளையாட்டுப் போட்டி:..... (2) சிறந்த வீரன் :.....

(3) மதியம் :..... (4) விளையாட்டு மைதானம்:.....

(5) நிறங்கள் :..... (6) பிரதம விருந்தினர் :.....

(7) குண்டெறிதல் :..... (8) அஞ்சலோட்டம் :.....

(9) வினோத உடைப்போட்டி:..... (10) பரிசில்கள் :.....

9. வீட்டில் வளர்க்கும் ஒரு பிராணியைப் பற்றி பத்து வாக்கியங்கள் எழுதுக:

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

பாடம் - 16

உரையாடல்:

நண்டும் கொக்கும்

(ஒரு கொக்கு ஒரு குளத்திலிருந்து மீன்களைப் பிடித்து வந்தது. அது ஒருநாள் குளக் கரையில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த மீன்கள் கொக்கின் துக்கத்தை அறிய விரும்பின.)

மீன்கள்:- "என்ன கொக்காரே! இன்று ஏன் துக்கமாய் இருக்கிறீர்? இத்தனை நாள் எங்களைப் பிடித்துத் தின்றதால் வயிற்றுக் கோளாறோ?"

கொக்கார்:- "ஐயோ! செம்படவர் நாளை வந்து, வலை வீசி உங்களையெல்லாம் பிடிக்கப்போவதாகக் கூறினார்கள். அதற்குப் பின் உங்களில் சிலவற்றைப் பிடிக்கும் எனக்கு, இரை இல்லாது போய்விடும். நீங்கள் எல்லோரும் பிடிபடப்போகிறீர்கள்."

(இதைக்கேட்ட அந்தக் குளத்து மீன்கள் ஒன்று கூடின. எங்கள் மேல் கருணை கொண்டு, எவன் எங்களுக்கு உதவ முன்வந்தானோ, அவனிடமே உபாயம் கேட்போம் என்று தீர்மானித்துக் கொக்கிடம் வந்தன.)

மீன்கள்:- "கொக்காரே, கொக்காரே, ஒரு புதுவழியைக் கண்டு, எங்களைக் காப்பாற்றும்.

கொக்கார்:- (மனத்துள் சந்தோசப்பட்டு, வெளியில் துக்கம் காட்டுவது போல இரக்கமான குரலில் பேசியது.)

"நானோ, வயதானவன்; அந்தச் செம்படவர்களோடு என்னால் சண்டைபோட முடியாது. அவர்கள் வருவதற்கு முன்னர் வேறோர் இடத்துக்கு உங்களை எல்லாம் கொண்டு போகிறேன். எனக்கு பரோபகாரி என்ற பெயரும் கிடைக்கும்."

மீன்கள்:- "நன்றி, நன்றி, செம்படவர்கள் வரும் முன்பு எங்களைக் கொண்டு செல்லும், அவர்கள் வந்து எம்மைப் பிடித்து விடுவார்கள்."

(கொக்கு அலகினால் மீன்களைக் கௌவிக்கொண்டு, உதவுவது போலப் பறந்து ஒரு பாறையின் மேல் வைத்து அவற்றை உண்டது. அது திரும்பி வரும்போது ஒரு நண்டைக் கண்டது.)

நண்டு:- "கொக்காரே என்னையும் கூட்டிச்செல்லும்."

கொக்கார்:- "நண்டாரே, உமக்கும் உதவுகிறேன். என்னால் முடிந்தது இதுதான்."

(போகும் வழியில் இறந்து சிதைந்த மீன்களையம், மீன் முள்ளுகளையும் நண்டு கண்டது. நண்டுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.)

நண்டு:- "கொக்காரே! கொக்காரே, வெளிக்கிடும் அவசரத்தில், எனது குடும்பத்தினர்க்கும், நண்பர்களுக்கும் சொல்லவில்லை. அவர்களும் தப்புவார்களே."

கொக்கு:- (மனதிற்குள் மற்ற நண்டுகளையும் சாப்பிடலாம் என நினைத்தது.)

"நண்டாரே, நண்டாரே, எல்லோருக்கும் உதவ எனக்கு ஆசை"

(மீண்டும் நண்டாரைக் குளக்கரையில் இறக்கியது. உடனே நண்டு தன் கொடுக்கினால், கொக்கின் கழுத்தில் கடித்துத் துண்டாக்கியது.)

- அடாது செய்தார் படாத பாடுபடுவார்.
- பேராசை பெருநட்டம் -

1. கேள்விகள் :

(1) குளத்தில் இருந்த மீன்களை கொக்கு என்ன செய்து வந்தது?

(2) கொக்கு ஏன் தலையைப் போட்டுக்கொண்டிருந்தது?

(3) மீன்களிடம் கொக்கு என்ன சொல்லியது?

(4) மீன்கள் கொக்கிடம் கேட்ட உபாயம் என்ன?

(5) கொக்கு அந்த மீன்களைக் குளத்தில் இருந்து என்ன எண்ணத்துடன் கொண்டு போனது?

(6) கொக்கு கொண்டு சென்ற மீன்களை என்ன செய்தது?

(7) கொக்குடன் செல்லும் பொழுது நண்டு வழியில் என்ன கண்டது?

(8) நண்டு கொக்கைப் பார்த்துக் கூறியது என்ன?

(9) கொக்கு ஏன் நண்டைத் திரும்பக் குளத்திற்குக் கொண்டு போனது?

(10) குளக்கரைக்கு வந்த நண்டு கொக்கை என்ன செய்தது?

2. சேர்த்து எழுதுக :

(1) குளத்தில் + இருந்து

(2) குளம் + கரை

(3) வயிற்று + கோளாறு

(4) கடமை + பட்டிருக்கிறோம்

(5) மகிழ்ச்சி + அடைந்து

(6) பேர் + ஆசை

(7) பார்த்து + இருந்து

(8) வேறு + இடம்

(9) போய் + சேர்க்கிறேன்

(10) மீன்கள் + எல்லாம்

3 பிரித்து எழுதுக:

(1) என்னாலாகாது
(2) தொங்கப்போட்டது
(3) சிதறிக்கிடந்தன
(4) உங்களையெல்லாம்
(5) கடமைப்பட்டிருக்கிறோம்
(6) வயதானவன்
(7) மகிழ்ச்சியடைந்து
(8) அடியிலிருந்து
(9) பிழைத்துப்போவீர்கள்
(10) என்னாலான

4. ஒருமை - பன்மை எழுதுக:

(1) மீன் .....
(2). ..... கொக்குகள்
(3). நண்டு .....
(4). ..... போங்கள்
(5). உபாயம் .....
(6). ..... வலைஞர்கள்
(7). பாறை .....
(8). செம்படவன் .....

5. பின்வரும் சொற்களுக்கு ஏற்ற பொருள் தருக.

(1). விரும்பின -
(2). சண்டை -
(3). உபாயம் -
(4). தந்திரசாலி -
(5). பரோபகாரி -
(6). வஞ்சகம் -
(7). அலகு -
(8). கலைஞன் -
(9). கபடம் -
(10). பேராசை -

வீட்டு வேலை

6. வசனம் எழுதுக:

(1) பேச்சை - .....

(2. நண்டு - .....

(3) கொடுக்கு - .....

(4) கொக்கு - .....

(5) நம்பிக்கை - .....

(6) உபாயம் - .....

7. பின்வரும் சொற்களுக்கு பொருத்தமான ஆங்கிலச் சொல் எழுதுக:

(1) கொக்கு ..... (2) இரக்கம் .....

(3) நண்டு ..... (4) நன்றி .....

(5) குளம் ..... (6) பரோபகாரி .....

(7) உபாயம் ..... (8) குடும்பம் .....

(9) இரை ..... (10) பேராசை .....

8. "மீன்" பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக:

.....

.....

.....

.....

.....

.....

.....

பாடம் - 17

சிலப்பதிகாரம்

தமிழ்த்தாயை அணிசெய்யும் இலக்கிய ஆபரணங்களில் ஒன்றாகச் சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் போற்றப்படுகின்றது. தேவர், அரசர்களது கதைகளைக் கூறும் மரபிலிருந்து விடுபட்டு சாதாரண மக்களின் கதையைக் கூறுவதனால் இதனை புரட்சிக்காப்பியம் என்றும் கூறுவர். சேர நாட்டைச் சேர்ந்த இளங்கோ அடிகள் என்னும் துறவியால் இரண்டாம் நூற்றாண்டளவில் பாடப்பட்டது என்பது ஆய்வாளர் கூற்றாகும்.

காவிரிப்பூம் பட்டணத்தில் வாழ்ந்த மாசாத்துவான் மகனான கோவலனுக்கும், மாநாய்கனின் மகளான கண்ணகிக்கும் அக்கால முறைப்படி பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். இல்லறம் சிறக்க இனிதே வாழ்ந்த இருவரும் மாதவி எனும் கணிகையின் நாட்டிய அரங்கேற்றத்திற்குச் சென்றனர். கோவலன் மாதவியின் நடனத்தால் கவரப்பட்டுத் தனது மனைவியைப் பிரிந்து மாதவியுடன் வாழ்ந்துவந்தான்.

வருடாவருடம் இந்திரவிழாவிற்குச் சென்ற கோவலனுக்கும் மாதவிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் மாதவியை விட்டு கணவனையே தெய்வம் என்று போற்றும் கண்ணகியிடம் மீண்டான். தனது அளப்பரிய செல்வத்தை எல்லாம் மாதவிக்கு வழங்கிவிட்டதால் திரும்பவும் தான் வாணிபம் செய்ய விரும்பினான். கண்ணகி தனது மாணிக்கப்பரல் கொண்ட பெறுமதி மிகுந்த காற்சிலம்புகளில் ஒன்றை கோவலனிடம் வாணிபம் செயலாமெனக் கொடுத்தாள். அதனை மூலதனமாகக் கொண்டு பொருளீட்டலாம் என்று இருவரும் மதுரை மாநகரம் சென்றனர்.

மதுரை நகரக் கடைவீதியில் கண்ணகியின் சிலம்பை விற்க முயன்ற கோவலன் மீது ராணியின் சிலம்பை திருடியதாகப் பழி சுமத்தப்பட்டது. ''கள்வனைக் கொல்க'' என்ற பாண்டிய மன்னன் கட்டளைப்படி காவலர், கோவலனுக்கு மரணத்தண்டனை விதித்தனர். தனது கணவன் நியாயம் இன்றிக் கொலை செய்யப்பட்டான் என்று அறிந்த கண்ணகி தீராத கவலையும், ஆறாத கோபமும்

கொண்டாள். தலைவிரி கோலமாக ஒற்றைச் சிலம்புடன் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் அவைக்குச் சென்று நீதி கேட்டு வழக்குரைத்தாள்.

திருடப்பட்ட ராணியின் சிலம்புகள் முத்துப் பரல்களை உடையன என்று மன்னன் கூறியதும் கண்ணகி தனது சிலம்பைத் தரைமீது வீசி எறிந்தாள். அச்சிலம்பு உடைந்து மாணிக்கப்பரல்கள் எங்கும் தெறித்ததைக் கண்ட மன்னன் அதிர்ச்சியுற்றான். தீர விசாரித்து ஆராயாமல் தண்டனை வழங்கிய என்னால் பாண்டிய அரசின் செங்கோல் வளைந்ததே என்று வருந்தி நெஞ்சம் வெடித்து வீழ்ந்து இறந்தான். அதனைக் கண்ட அரசி கோப்பெருந்தேவியின் உயிரும் அக்கணமே அவளைவிட்டு நீங்கிற்று. கற்பிற் சிறந்த கண்ணகியின் சினத்தால் அந்தணர், அறவோர், பசுக்கள், பத்தினிப்பெண்கள், குழந்தைகள் ஆகியோர் தவிர்த்து மதுரை மாநகரம் முழுவதும் தீப்பட்டு எரிந்தது.

சினம் தணிந்த கண்ணகி மேற்குத் திசை நோக்கி சேரநாடு சென்றாள். அங்குள்ள திருச்செங்குன்றின் மீதிருந்து விண்ணிலிருந்து கோவலனுடன் வந்த விமானத்தில் ஏறித் தேவலோகம் சென்றாள் என்று அதனைக் கண்ட மலைக்குறவர்கள் சேர மன்னன் செங்குட்டுவனிடம் கூறினர். அவன் வடநாடு சென்று கனகவிசயர் தலையில் கல்லேற்றி வந்து கண்ணகிக்குச் சிலை எடுத்து வழிபட்டான்.

பெண்ணின் பெருமையை விளக்குவதுடன் விதியின் வலிமையையும், அரசியலில் நீதியின் அவசியத்தையும் வற்புறுத்தும் சிறப்புடைய காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும்.

இந்நூலின் முலம் பண்டைய தமிழர்களின் வாழ்க்கை முறைகளையும், தமிழர் நாகரீகத்தினையும், பிறநாட்டு வாணிபத்தில் திரைகடல் ஓடி ஈடுபட்டமையையும் அறிய முடிகிறது. மேலும் செழிப்பு மிகுந்த நாட்டு வளமும், பல வசதிகள் கொண்ட நகர அமைப்புகளும் சிறந்தோங்கி இருந்தமையையும் அறியமுடிகிறது. கண்ணனைய நுண்கலையின் பல அரிய விபரங்களும், பிறவும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றினின்று தமிழர் நாகரீக மேம்பாட்டின் தொன்மை துலங்குவதை நாம் அறியக் கூடியதாக உள்ளது.

1. வினாக்கட்கு விடை எழுதுக.

(1). சிலப்பதிகாரம் யாரால் பாடப்பட்டது?
(2). இதனை புரட்சிக்காப்பியம் எனப்படுவது ஏன்?
(3). கோவலனின் தந்தையின் பெயர் என்ன?
(4). கண்ணகி கோவலனை மணந்த இடம் எது?
(5). மாதவியை கோவலன் பிரிந்த விழா எது?
(6). பாண்டிய மன்னின் தலைநகரம் எது?
(7). பாண்டிய ராணியின் பெயர் யாது?
(8). கண்ணகியின் சிலம்பிலிருந்த பரல்கள் எதனால் ஆனவை?
(9). மதுரை தீப்பட்டபின் கண்ணகி எங்கு சென்றாள்?
(10). சிலப்பதிகாரம் கூறும் மூன்று முக்கிய நீதிகள் எவை?

2. ஒத்த கருத்துடைய சொற்களை எழுதுக.

(1). ஆபரணம் - .....
(2). நடனம் - .....
(3). வாணிபம் - .....
(4). குற்றம் - .....
(5). கோபம் - .....
(6). நெருப்பு - .....
(7). குன்று - .....
(8). அரசி - .....
(9). வலிமை - .....
(10). முதியோர் - .....
(11). மரபு - .....
(12). துறவி - .....
(13). மூலதனம் - .....
(14). ஆய்வாளர் - .....
(15). அளப்பரிய - .....
(16). ஆகுதி - .....
(17). அவை - .....
(18). அக்கணமே - .....
(19). விண் - .....
(20). கொல்க - .....

3. பிரித்து எழுதுக

(1). பொருளீட்டலாம் - .....
(2). வழக்குரைத்தாள் - .....
(3). முத்துப்பரல்கள் - .....
(4). விண்ணிலிருந்து - .....
(5). கல்லேற்றி - .....

4. பந்தியில் கீழே இருக்கும் வட்டங்களுள் மூன்று எழுத்துச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

உதாரணம்: ஒன்று



வீட்டுவேலை:

1. தமிழ்த்தாயை அணிசெய்த வேறு மூவருடைய பெயர்களை எழுதி, அவர்களைப் பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக.

2. உமக்குப் பிடித்த ஒரு தமிழ்ப்பாடல் அல்லது பாடல்களை எழுதி அவற்றின் விளக்கங்களையும் எழுதுக.
(இது பத்து வரிகளுக்குக் குறையாது இருக்க வேண்டும்)

பாடம் - 18

நன்றி கெட்ட முதலை

ஓர் ஆற்றங்கரையில் ஒரு நாவல்மரம் ஓங்கி வளர்ந்திருந்தது. அம்மரத்தில் சுவை மிகுந்த நாவற்பழங்கள் எப்போதும் கிடைத்து வந்ததால் ஒரு குரங்கு அம்மரத்தில் வசித்து வந்தது. ஆழம் மிகுந்த ஆற்றில் வசித்து வந்த ஒரு முதலை ஆற்றங்கரையில் ஏறி நாவல் மரத்தடி மண்ணில் புரள வந்திருந்தது. முதலையைக் கண்ட குரங்கு அதனைத் தனது விருந்தினனாக வரவேற்று, சுவை மிகுந்த நாவற்பழங்களைப் பறித்துப் போட்டது. அவற்றை உண்ட முதலை அதன் சுவையை விரும்பி நாள்தோறும் வந்து குரங்குடன் சம்பாஷித்துச் செல்வதை வழக்கமாகிக் கொண்டது.

ஒருநாள் தான் உண்டபின் எஞ்சிய பழங்களை நீருக்கடியில் தனது மனைவியிடம் கொண்டுசென்று உண்ணக் கொடுத்தது. அவற்றை உண்ட பெண் முதலை, "அடடா! இப்பழங்கள் இவ்வளவு சுவையாக இருக்குமானால் இதனை எப்போதும் உண்ணும் குரங்கின் ஈரல் எவ்வளவு சுவையாக இருக்கும்? எப்படியாவது அக்குரங்கின் ஈரலைக் கொண்டுவந்து எனக்குக் கொடுக்க வேண்டும்" என்று விடாப்பிடியாக வற்புறுத்தியது.

மறுநாள் முகவாட்டத்துடன் காணப்பட்ட முதலையைப் பார்த்த குரங்கு வாட்டத்தின் காரணத்தைக் கேட்டது "தினமும் உனது அன்பான உபசரிப்பை ஏற்பதற்குப் பிரதிஉபகாரமாக உன்னை விருந்துக்கு அழைத்து வாரமலிருப்பதையிட்டு எனது மனைவி என்னில் கோபமாயுள்ளாள்" என்று முதலை கூறியது. குரங்கை தனது முதுகில் ஏறி விருந்துக்கு வரும்படி

முதலை கேட்டது. முதலையின் பேச்சினை நம்பிய குரங்கு முதலையின் முதுகின்மேல் தாவி ஏறியது. சிறிது தூரம் சென்றதும் குரங்கு நீரில் தாழமுன் முதலை தனது உண்மையான நோக்கத்தைக் கூறியது. இதனைக் கேட்ட குரங்கு மனங்கலங்காது "அடடா அருமை நண்பனே! இதனை முன்பே சொல்லக்கூடாதா? முதலில் சொல்லியிருந்தால் மரப்பொந்தில் கழற்றி வைத்துவிட்டு வந்த என் ஈரலைக் கையுடன் கொண்டு வந்திருப்பேனே" என்று கூறியது. "அதனாலென்ன நாம் திருப்பிப்போய் அதனை எடுத்து வந்தால் போயிற்று" என்று கூறி முதலை திரும்பவும் நாவல் மரத்தடிக்கு வேகமாகச் சென்றது.

மரத்தை அண்மித்ததும், தப்பினோம் பிழைத்தோம் என்று குரங்கு மரத்தில் பாய்ந்து ஏறிக்கொண்டது. "தீயாரோடு இணங்கி இருப்பதுவும் தீது" என்று தனது மதி நுட்பத்தால் உயிர் தப்பிய குரங்கு தனக்குள் சொல்லிக்கொண்டது.

1. வினாக்கட்கு விடை எழுதுக.

(1). குரங்கு வசித்த மரத்தின் பெயர் என்ன?

.....

(2). குரங்கு ஏன் அந்த மரத்தில் வசித்தது?

.....

(3). முதலையைக் குரங்கு எப்படி உபசரித்தது?

.....

(4). ஈரலை எங்கு வைத்துவிட்டு வந்ததாக குரங்கு முதலையிடம் கூறியது?

.....

(5). இக்கதையில் இருந்து நாம் என்ன அறிவுரையைப் பெற்றுக்கொள்கிறோம்?

.....

2. ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுக

(1). ஓங்கி ..... (11). வானம் .....

(2). சுவை ..... (12). கடவுள் .....

(3). புரள ..... (13). உடை .....

(4). சம்பாஷனை..... (14). மதி .....

(5). எஞ்சிய ..... (15). வீடு .....

(6). உண்ண ..... (16). பழம் .....

(7). வற்புறுத்தல்..... (17). திருடன் .....

(8). தாவு ..... (18). ஏழை .....

(9). நோக்கம் ..... (19). பரிசு .....

(10). முன்னே ..... (20). குரு .....

3. எதிர்ச் சொற்கள் எழுதுக.

(1). ஆழம்	(6). புதுமை	(11). வீரன்
(2). மனைவி	(7). இளமை	(12). இறப்பு
(3). அண்மை	(8). நண்பன்	(13). குளிர்
(4). இணக்கம்	(9). வெற்றி	(14). மகிழ்ச்சி
(5). தீது	(10). இலாபம்	(15). துன்பம்

4. பிரித்து எழுதுக

(1). ஆற்றங்கரை = ...+.....

(2). நாவற்பழங்கள் = ...+.....

(3). அம்மரத்தில் = ...+.....

(4). வந்திருந்தது = ...+.....

(5). நீருக்கடியில் = ...+.....

(6). வராமலிருப்பதையிட்டு = ...+.....

5. சேர்த்து எழுதுக

(1). மரம் + கிளை = ...

(2). கங்கை + கரை = ...

(3). இரும்பு + கதவு = ...

(4). கூர் + அம்பு = ...

(5). சிறிய + குருவி = ...

(6). பழம் + சாறு = ...

(7). மா + காய் = ...

(8). நாவல் + பழம் = ...

(9). பச்சை + கிளி = ...

(10). ஆறு + கரை = ...

வீட்டுவேலை:

1. வசனம் அமைக்குக.

(இவை மேலுள்ள பந்தியில் இல்லாதவையாக இருத்தல் வேண்டும்)

(1). விருந்தினர்

(2). வரவேற்றல்

(3). விடாப்பிடியாக

(4). மதிநுட்பம்

(5). உயிர் தப்பியவர்

(2) சுவையுள்ள பழங்கள் தரும் ஐந்து பழங்களையும், மரங்களின் பெயர்களையும் எழுதுக.

(3) மரங்களில் வாழும் ஐந்து மிருகங்கள், ஐந்து பறவைகளின் பெயர்களையும், அவைகள் வீசிக்கும் இடங்களின் பெயர்களையும் எழுதுக.

(4) கட்டங்களில் காணப்படும் எழுத்துகளால் எழுதப்படக்கூடிய சொற்களை எழுதுக.

நா	சி	ம	ழ
அ	வ	ல	ம்
சு	ன்	க	னி
ப்	பு	ளி	ள்

பாடம் - 19

கப்பல் பார்க்கப்போன சேவகன்

ஓர் அழகிய இனிய மாலை நேரம். பகல் முழுவதும் உலா வந்த ஆதவன் மேற்கிலே மெதுவாக மறைவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அருகிருந்த மலைகளின் ஊடாக மெல்லிய குளிர்காற்று வீசிக்கொண்டு இருந்தது. அரண்மனை நந்தவனத்தில் அரசியாருடனும், இளவரசனுடனும் உலா வந்துகொண்டிருந்த அரசர் முகத்திலும் அந்தக் குளிர்காற்று இதமாகப் பட்டது.

அப்போது ஒரு காவலன் அருகே வந்து அரசரை வணங்கினான். மறுகணம் "அரசே! நானும் அரண்மனையில் வேலை செய்கிறேன். உங்கள் அமைச்சரும் வேலை செய்கிறார். ஆனால் நீங்கள் அவருக்கு என்னைவிட அதிகமாக சம்பளம் கொடுக்கிறீர்களே இது நியாயமா?" என்று கேட்டான்.

அரசர் எதுவும் பேசவில்லை. "சரி, நீ நாளைக் காலை என்னை அரண்மனையில் வந்து பார்" என்று கூறினார். அந்தக் காவலன் மீண்டும் அரசரை வணங்கிவிட்டுச் சென்றான்.

மறுநாள் அரசர் அரண்மனை வாயிலில் அந்தக் காவலன் நிற்பதைக் கண்டார். அவனை உள்ளே வரும்படி கட்டளையிட்டார். அவன் அருகே வந்ததும் "இன்று எமது துறைமுகத்தில் ஏதாவது கப்பல் வந்திருக்கிறதா என்று பார்த்து வா" என்றார்.

மறுகணமே ஓட்டமும் நடையுமாக துறைமுகத்திற்குச் சென்றான். தூரத்தே ஒரு கப்பல் நங்கூரம் இட்டு நிற்பதைக் கண்டதும் ஆனந்தம் அடைந்தான். சிறிது நேரத்தில் அரண்மனையை வந்தடைந்த காவலன் அரசரிடம் "அரசே! துறைமுகத்தில் ஒரு கப்பல் வந்திருக்கின்றது" என்றான்.

"அந்தக் கப்பல் எங்கிருந்து வந்திருக்கின்றது" என்ற அரசர் கேட்டார். உடனே காவலன் மீண்டும் கடற்கரைக்கு ஓடினான். அங்கிருந்தவர்களிடம் அரசர் கேட்ட கேள்வியைக் கேட்டான். பதில் கிடைத்ததும் மீண்டும் அரண்மனையை நோக்கி விரைந்தான்.

"அரசே! அந்தக் கப்பல் அரேபிய நாட்டிலிருந்து வந்திருக்கிறது" என்றான். "மிகவும் நல்லது. அதிலே என்னென்ன பொருட்கள் இருக்கின்றன?" என்று அரசர் கேட்டார். திரும்பவும் அந்தக் காவலன் மூச்சு வாங்க அந்தத் துறைமுகத்திற்கு ஓடினான். அந்தக் கப்பலில் உணவுப் பொருட்கள் வந்திருக்கின்றன என்று அறிந்ததும் அரண்மனைக்கு வந்து அப்படியே அரசரிடம் கூறினான்.

அரசர் அவன் மிகவும் களைத்துப்போய் இருப்பதைக்கண்டு அங்கேயே இருந்து இளைப்பாறும்படி கூறிவிட்டு தனது அமைச்சரை அழைத்து "அமைச்சரே! இன்று எமது துறைமுகத்தில் ஏதாவது கப்பல் வந்திருக்கிறதா என்று பார்த்து வாரும்" என்றார். அமைச்சரும் அரசன் இட்ட கட்டளைப்படி துறைமுகம் சென்று வந்தார். திரும்பி வந்த மந்திரியார் "அரசே! இன்று எமது துறைமுகத்தில் ஒரு கப்பல் வந்திருக்கிறது. அந்தக் கப்பல் அரேபிய நாட்டிலிருந்து உணவுப் பொருட்களைக் கொண்டு வந்திருக்கின்றது" என்றார்.

உடனே அரசர் அந்தக் காவலனைப் பார்த்து "நான் அமைச்சருக்கு ஏன் உன்னைவிட அதிகமாகச் சம்பளம் கொடுக்கிறேன் என்பது விளங்குகிறதா?" என்று கேட்டார். அந்தக் காவலன் எதுவுமே பேசவில்லை. அரசர் ஒவ்வொருவருடைய திறமைக்கு ஏற்றவாறே பதவிகளும், ஊதியமும் வழங்குகிறார். தான் அரசரிடம் அப்படிக் கேட்டது எவ்வளவு முட்டாள்தனம் என்று எண்ணி "அரசே! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்றான்" அரசர் புன்னகை பூத்தார்.

1. வினாக்கட்கு விடை எழுதுக.

(1). காவலனின் எதனை நியாயமா என்று கேட்டான்?
(2). காவலன் எத்தனை முறை துறைமுகத்திற்குச் சென்றான்?
(3). மந்திரி எத்தனை முறை துறைமுகத்திற்குச் சென்றார்?
(4). கப்பல் எந்த நாட்டிலிருந்து வந்திருந்தது?
(5). கப்பல் ஏன் கடற்கரையில் நின்றது?
(6). காவலன் அரசரை முதலில் சந்தித்தபோது அவருடன் வேறு யார் யார் இருந்தார்கள்?
(7). இந்தக் கதையிலிந்து நாம் என்ன அறிவுரையைக் கற்றுக் கொள்கிறோம்?
(8). காவலன் அரசரை முதலில் எப்படியான வேளையில் சந்தித்தான்?
(9). சூரியனைப் பற்றி இக்கதையிலே என்ன கூறப்பட்டுள்ளது?
(10). இக்கதையில் உமக்குப் பிடித்த தமிழ் வசனம் அல்லது வசனங்கள் எவை?

2. ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுக

(1). சேவகன் .....
(2). அமைச்சர் .....
(3). ஊதியம் .....
(4). ஆனந்தம் .....
(5). விரைந்து .....

3. எதிர்ச் சொற்கள் எழுதுக

(1). நியாயம் .....
(2). அதிகம் .....
(3). ஆனந்தம் .....
(4). விரைவாக .....
(5). அருகில் .....

4. ஆங்கிலச் சொற்கள் எழுதுக

(1). உலா ..... (2). மலை .....
(3). நங்கூரம் ..... (4). திறமை .....
(5). அறிவுரை ..... (6). முட்டாள்தனம்.....
(7). கட்டளை ..... (8). பதவி .....

வீட்டுவேலை

1. மேலே தரப்பட்ட கதையிலிருந்தும், கற்பனையிலிருந்தும் பொருத்தமான சொற்களை எடுத்து கீழ்வரும் கட்டங்களை நிரப்புக.

ஆண்பால்	பெண்பால்	பலர்பால்	ஒன்றன்பால்	பலவின்பால்

2. பொருள் விளங்க வசனம் அமைக்குக.

(1). மூச்சு வாங்க

(2). புன்னகை பூத்தல்

(3). ஆதி கால, தற்கால போக்குவரத்து

(4). நவீன தொலைத் தொடர்பு

3. "நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு." - ஔவையார்

இதன் பொருளை எழுதி, இதற்கும் இந்தக் கதைக்கும் உள்ள ஒற்றுமையை விளக்குக.

பாடம் - 20

ஔவையின் அறிவுரை

ஔவையார் எழுதிய நீதி நூல்களில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகியவை தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக அமைந்தவைகளாகும். அவற்றில் கீழ்க்காணும் பாடல்களை நாமும் பயின்று பயனடைவோம்.

1. கற்பிளவேடு ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடு ஒப்பாரும் போல்வாரே – விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

பொருள்: கயவர்களது கோபம் கல்லைப் பிளந்ததுபோல் வடு ஒரு போதும் மறையாது இருக்கும். ஆனால் சான்றோர்களது கோபம் மறுகணமே இருந்த இடம் தெரியாது மறைந்துவிடும்.

2. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்கு
தன்தேச மல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

பொருள்: நாட்டை ஆளும் அரசனுக்கு அவனுடைய நாட்டிலேதான் சிறப்பு. ஆனால் கல்வி கற்றவனுக்கோ உலகத்தில் எங்கு சென்றாலும் சிறப்பு.

3. கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிராம்தான் வேண்டுமே - வம்புசெறி
தீங்கினர் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

பொருள்: கொம்பு உள்ள மிருகத்திற்கு கிட்டப் போகாது ஐந்து முழ தூரத்திலும், குதிரைக்கு பத்து முழ தூரத்திலும், சினம் கொண்ட யானைக்கு ஆயிரம் முழ தூரத்திலும், தீயவரைக் கண்டால் அவர்கள் கண்களில் படாமல் வெகு தூரத்திலும் இருப்பதே சிறந்தது.

4. சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

பொருள்: பூமியில் இரண்டு சாதிகள் மட்டுமே உள்ளன. நீதி தவறாத நல் மார்க்கத்தில் நின்று தருமம் செய்பவர்களே உயர்குலத்தோர் என்றும் அவ்வாறு தருமம் செய்யாதோர் தாழ்ந்த குலத்தோர் என்று உண்மை நூல்கள் கூறும்.

பாடம் - 21

அடிப்படை இலக்கணம்

மாணவர்கள் இதுவரை மிக இலகுவான தமிழ் இலக்கணத்தையே கற்று வந்தார்கள். இனிச் சற்று விரிவான அடிப்படை இலக்கணத்தைக் கற்போம்.

உயிர் எழுத்துக்கள்: (12) - குறில் - அ, இ, உ, எ, ஒ
நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

ஆய்த எழுத்து: (1) - அ∴கேனம் = ∴

மெய் எழுத்துக்கள்: (18) - வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

உயிர்மெய் எழுத்துக்கள்: (12 x 18) = 216

தமிழ் எழுத்து வரி வடிவங்களின் மொத்த எண்ணிக்கை:
(12 + 1 + 18 + 216) = 247

அறிந்துகொள்ளுங்கள்

ஆண்பால்: ஆணைக் குறிக்கும் சொல். **உதாரணம்:** அவன், தம்பி, மாமா
பெண்பால்: பெண்ணைக் குறிக்கும் சொல். அவள், தங்கை, மாமி
பலர்பால்: உயர்திணையில் பலரைக் குறிப்பது. அவர்கள், மங்கையர்
ஒன்றன்பால்: அ∴றிணையில் ஒன்றைக் குறிப்பது. அது, பறவை
பலவின்பால்: அ∴றிணையில் பலவற்றைக் குறிப்பது. அவை, பறவைகள்

ஆண், பெண் இரண்டிற்கும் பொதுவான சொற்கள்:
நோயாளி, ஊமை, பாவி..
பெண்பால் பெறாத சொற்கள்: குரிசில், விடலை.

எதிர்ச்சொற்கள்: எதிரான கருத்துடைய சொற்கள். - மேலே - கீழே
ஒத்த சொற்கள்: ஒரே கருத்தைக் கொண்ட சொற்கள். - அம்மா, அன்னை, தாய்

குறிப்பு: ஒரு சொல் பல பொருள்களையும் கொண்டிருக்கும்.
எடுத்துக்காட்டு: தோழன் - நண்பன், சினேகிதன், மித்திரன்.

பல சொற்கள் ஒரே பொருளையும் குறிக்கும்:
எடுத்துக்காட்டு: கரி, அத்தி, வேழம் - யானை

இரட்டைச் சொற்கள்: இரட்டைக் கிளவி என்று பெயர்.
இரண்டு சொற்களாக இணைந்தே வரும்.
பிரித்தால் பொருள் தராது.
எடுத்துக்காட்டு: கடுகடு, சளசள, பளபள...

அடுக்குத் தொடர்: இரண்டு சொற்களாக இணைந்தே வரும்.
பிரித்துப் படித்தாலும் பொருள் தரும்.
எடுத்துக்காட்டு: வா வா, வருக வருக,
வாழ்க வாழ்க...

பெயர்ச்சொல்: ஒரு பொருளைக் குறிக்கும் சொல்.
எடுத்துக்காட்டு: கரும்பலகை.

வினைச் சொல்: ஒரு மனிதர் அல்லது பிராணி அல்லது பொருளின் செயலைக் குறிக்கும் சொல். இது காலத்தையும் காட்டும்.
எடுத்துக்காட்டு: படிக்கிறான்.

பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள்: அடி, அறை, ஆடி, ஓடு, ஆடு, தை,..

அறு வகைப் பெயர்கள்:

பொருட்பெயர் - பொருளை உணர்த்தும் பெயர்.
எடுத்துக்காட்டு: புத்தகம்.

இடப்பெயர் - இடத்தை உணர்த்தும் பெயர்.
எடுத்துக்காட்டு: இலண்டன்.

காலப்பெயர் - காலத்தை உணர்த்தும் பெயர்.
எடுத்துக்காட்டு: காலை.

சினைப்பெயர் - உறுப்பை உணர்த்தும் பெயர்.
எடுத்துக்காட்டு: தலை.

குணப்பெயர் - குணங்களின் பெயர்களை உணர்த்தும் பெயர்.
எடுத்துக்காட்டு: சிவப்பு.

தொழிற்பெயர் - தொழில்களின் பெயரை உணர்த்தும் சொல்.
எடுத்துக்காட்டு: படித்தான்.

திணை: உயர்திணை - மக்கள், தேவர். நரகர்

அ.்றிணை - மக்கள், தேவர் அல்லாதவை.
எடுத்துக்காட்டு: மிருகங்கள், பறவைகள், மரம், கதிரை.

ஒருமை: பொருளைக் குறிப்பது.
பன்மை: ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது.

வாக்கியங்களில் பெயர்ச் சொற்கள் வரும் இடங்களைக் கொண்டு, அவற்றைத் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

தன்மை: ஒரு வார்த்தை பேசுபவர் தன்மை.
எடுத்துக்காட்டு: நான், நாம்.

முன்னிலை: பேசுவதை முன்னின்று கேட்பவர் முன்னிலை.
எடுத்துக்காட்டு: நீ, நீங்கள். நீவிர், நீங்கள்

படர்க்கை: யாரைப் பற்றி அல்லது எதைப் பற்றிப் பேசுகின்றோமோ அவற்றைக் குறிப்பது. படர்க்கை.
எடுத்துக்காட்டு: அவள், அவர்கள், அவைகள், அவன், அது

வேற்றுமை:

முதலாம் வேற்றுமை: இது திரிபு இல்லாத பெயர்ச்சொல். இதனை எழுவாய் வேற்றுமை என்று கூறலாம். இதற்கு உருபு இல்லை.

இரண்டாம் வேற்றுமை: இது எழுவாயைச் செய்யப்படுபொருளாக மாற்றுவது. இதனால் இதனைச் செயப்படுபொருள் வேற்றுமை என்றும் கூறலாம்.
இதன் உருபு "ஐ" ஆகும்.

மூன்றாம் வேற்றுமை: இதன் உருபுகள் - "ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன், கொண்டு" என்பன.

நான்காம் வேற்றுமை: இதன் உருபுகள் - "கு, ஆக" என்பன.

ஐந்தாம் வேற்றுமை: இதன் உருபுகள் - "இன், இல், இருந்து, நின்று" என்பன.

ஆறாம் வேற்றுமை: இதன் உருபுகள் - "அது, உடைய" என்பன.

ஏழாம் வேற்றுமை: இதன் உருபுகள் - "இல், கண், உள், இடம்" என்பன.

எட்டாம் வேற்றுமை: இதனை "விளி வேற்றுமை" என்றும் கூறலாம். இது முன்னிலையிலும், படர்க்கையிலும் உள்ளவர்களைத் தம்பால் அழைப்பதற்கு ஏற்ப மாறுபடும்.
எடுத்துக்காட்டு: "தாயே!, அரசே!, அண்ணா!" போன்றவை.

முற்றும் எச்சமும்:

வினைமுற்று: முற்றுப் பெற்ற வினைச்சொல்.
எடுத்துக்காட்டு: படித்தேன், வருகிறாள், வருவார், செய்தது...

வினையெச்சம்: வினைகளுடன் முடியும் முற்றுப்பெறாத வினைச்சொல். நடந்து, கண்டு, எழுதி... போன்றவை.
எடுத்துக்காட்டு: நடந்து வந்தான்.

பெயரெச்சம்: பெயர்களுடன் முடியும் முற்றுப் பெறாத வினைச்சொல்.
நடந்த, கண்ட, எழுதிய... போன்றவை.
எடுத்துக்காட்டு: நடந்த சிறுமி.

காலம்:

இறந்தகாலம்	-	முடிந்த சம்பவம்
நிகழ் காலம்	-	செய்கின்ற சம்பவம்
எதிர்காலம்	-	இனிமேல் செய்யப்போகும் சம்பவம்

சொற்றொடர்:
இரு சொற்களோ அல்லது பல சொற்களோ சேர்ந்து வருவதற்குச் **சொற்றொடர்** என்று பெயர். சொற்றொடரில் **நிலைமொழி, வருமொழி** என இரு வகைகள் உள்ளன. நிலைமொழியும், வருமொழியும் எதுவித மாற்றமும் இல்லாமல் சேருவதை **இயல்புச் சொற்றொடர்** என்போம்.

நிலைமொழி வருமொழி

இயல்புச் சொற்றொடர்:
எடுத்துக்காட்டு: அழகிய + பெண் = அழகிய பெண்.
நிலைமொழியும், வருமொழியும் சேரும்போது ஏதாவது ஒரு மாற்றம் ஏற்பட்டால் அது **விகாரச் சொற்றொடர்** எனப்படும். இவ்விகாரச் சொற்றொடர் **தோன்றல், திரிதல், கெடுதல்** என மூன்று வகைப்படும்.

நிலைமொழி வருமொழி

தோன்றல் விகாரம்:

எடுத்துக்காட்டு: தமிழ் + சொல் = தமிழ்ச்சொல்.

நிலைமொழியின் கடைசி எழுத்து அல்லது வருமொழியின் முதல் எழுத்து அல்லது இவ்விரண்டு எழுத்துக்களும் மாறி வந்தால் அதனைத் திரிதல் விகாரம் எனப்படும்.

நிலைமொழி வருமொழி

திரிதல் விகாரம்:

எடுத்துக்காட்டு: பல் + பொடி =பற்பொடி.

எடுத்துக்காட்டு: மலை + உச்சி = மலையுச்சி.

நிலைமொழியும், வருமொழியும் சேரும்போது நிலைமொழியின் கடைசி எழுத்து இல்லாமல் மறைந்து அல்லது கெட்டுப் போகின்றது.

நிலைமொழி வருமொழி

கெடுதல் விகாரம்:

எடுத்துக்காட்டு: மரம் + வேர் = மரவேர்.

இணை மொழிகள்:

இரு சொற்கள் எதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பினும் அடுத்தடுத்து வருபவை இணைமொழிகள்.

எடுத்துக்காட்டு: அகமும் புறமும்.
ஆடல் பாடல்.
இன்பம் துன்பம்.

எழுவாய், பயனிலை, செய்யப்படுபொருள்:

எழுவாய்: வாக்கியம் எழுதுவதற்குக் காரணமாய் இருப்பது.
பயனிலையை யார் அல்லது எது என்று கேட்டால் வருவது.

பயனிலை: எழுவாயின் செயலை விளக்குவது.

செய்யப்படுபொருள்: செயல் நடைபெற உதவியாய் இருப்பது. எழுவாய் பயனிலையோடு யாரை அல்லது எதை என்று கேட்டால் வருவது.

சில வாக்கியங்களில் எழுவாய் வெளிப்படாது இருக்கும். அப்போது அது **தோன்றா எழுவாய்** எனப்படும்.

தோன்றா எழுவாய்: பாடசாலைக்குச் சென்றோம். (நாம்)
இதிலே **நாம்** என்பது தோன்றா எழுவாய்.

மரபியல் சொற்கள்

உயிரினம்		ஆண்	பெண்
ஆடு	-	கடா	மறி
மாடு	-	எருது, காளை, ஏறு	பசு, நாகு
யானை	-	களிறு	பிடி
கோழி	-	சேவல்	பேடு, பெட்டை
நாய்	-	கடுவன்	பெட்டை
பூனை	-	கடுவன்	பெட்டை
மான்	-	கலை	பிணை
குரங்கு	-	கடுவன்	மந்தி
பறவைகள்	-	சேவல்	பேடு, பெடை

இளமை மரபுப் பெயர்கள்

அணில்	-	குஞ்சு, பிள்ளை	ஆடு	-	குட்டி
எருமை	-	கன்று	எலி	-	குஞ்சு
மாடு	-	கன்று	நாய்	-	குட்டி
பூனை	-	குட்டி	புலி	-	குட்டி
சிங்கம்	-	குட்டி	குதிரை	-	குட்டி
குரங்கு	-	குட்டி	கரடி	-	குட்டி
மான்	-	கன்று, குட்டி	யானை	-	கன்று, குட்டி
காக்கை	-	குஞ்சு	கிளி	-	குஞ்சு/பிள்ளை
கீரி	-	பிள்ளை	கோழி	-	குஞ்சு
மீன்	-	குஞ்சு	தவளை	-	வாற்பேத்தை
பறவை	-	குஞ்சு	பாம்பு	-	குட்டி, குருளை
தென்னை	-	கன்று, பிள்ளை	கமுகு	-	கன்று, பிள்ளை
மா	-	கன்று	பலா	-	கன்று
பனை	-	வடலி	வாழை	-	கன்று, குட்டி
வேம்பு	-	கன்று	மூங்கில்	-	போத்து
நெல்	-	நாற்று	பயிர்கள்	-	நாற்று

உயிரினங்களின் குரல் மரபுச் சொற்கள்

அணில்	-	கீச்சிடும்	ஆடு	-	கத்தும்/கதறும்
எருது	-	முக்காரமிடும்	எருமை	-	கத்தும்
கரடி	-	உறுமும்	கழுதை	-	கத்தும், கேவும்
குதிரை	-	கனைக்கும்	குரங்கு	-	அலப்பும்/கீச்சிடும்
கோட்டான்	-	அலறும், கூப்பிடும்	சிங்கம்	-	கர்ச்சிக்கும்
யானை	-	பிளிறும்	புலி	-	உறுமும்
நரி	-	ஊழையிடும்	நாய்	-	குரைக்கும்/குலைக்கும்
பூனை	-	சீறும்	பசு	-	கதறும்
பன்றி	-	உறுமும்	பல்லி	-	சொல்லும்
பாம்பு	-	இரையும்	தவளை	-	கத்தும்
ஆந்தை	-	அலறும்	கழுகு	-	அலறும்
காகம்	-	கரையும்	கிளி	-	பேசும் , சொல்லும்
குயில்	-	கூவும், பாடும்	குருவி	-	கீச்சிடும்
கோழி	-	கொக்கரிக்கும்	சேவல்	-	கூவும்
மயில்	-	அகவும்	வானம்பாடி	-	பாடும்
வண்டு	-	இரையும்,பாடும்,பூசலிடும்	வாத்து	-	கத்தும்
புறா	-	முனகும்/குறுகுறுக்கம்	தேனீ	-	இரையும், ரீங்காரமிடும்

இலை மரபுப் பெயர்கள்

தென்னை	-	கீற்று,ஓலை	பனை	-	ஓலை
நெல்	-	தாள்	புல்	-	தாள்
வாழை	-	இலை	மா	-	இலை

பிஞ்சு (மரங்களின் இளங்காய்) மரபுப் பெயர்கள்

தென்னை	-	குரும்பை	பனை	-	குரும்பை
மா	-	வடு	பலா	-	பிஞ்சு
புளி	-	பிஞ்சு			

தொகுதி மரபுச் சொற்கள்
(கூட்டப் பெயர்)

ஆ	-	நிரை	ஆடு	-	மந்தை
எறும்பு	-	சாரி	கப்பல்	-	கூட்டம், படை
ஒளி	-	கற்றை	கல்	-	குவியல்
கள்ளர்	-	கூட்டம், கும்பல்	காகிதம்	-	கோவை, கட்டு
மயிர்	-	குடுமி, கூந்தல்	சரக்கு	-	இருப்பு, கிடங்கு,மண்டி
சாவி	-	கொத்து/கோர்வை	சுருட்டு	-	கட்டு
செய்தி	-	திரட்டு	தானியம்	-	கதிர், குவியல்
தீவு	-	கூட்டம்	தென்னை	-	தோப்பு
தேனீ	-	கூட்டம்	தொண்டர்	-	படை
நாய்	-	கூட்டம்	நிகழ்ச்சி	-	தொடர்
நூல்	-	பந்து	நெல்	-	குவியல், தொகை
பனை	-	தோப்பு, கூடல்	பழம்	-	குலை
பல்	-	வரிசை	புல்	-	கற்றை
பாடகர்	-	குழு/குழாம்	பணம்	-	குவியல்
புத்தகம்	-	அடுக்கு, குவியல்	பேய்	-	கணம்
பூ மலர்	-	கற்றை, சரம் மாலை, கொத்து	மணி	-	மாலை
மரம்	-	சோலை	மக்கள்	-	கும்பல், கூட்டம்
மலை	-	தொடர்	மா	-	சோலை
மாணவர்	-	குழாம்	மீன்	-	கூட்டம்
முகில்	-	கூட்டம்	யானை	-	மந்தை/கூட்டம்
வாழை	-	தோப்பு/தோட்டம்	விளையாட்டு வீரர்-		குழு, கட்சி
விறகு	-	கட்டு	வீரர்	-	படை
வைக்கோல்-		போர்	செடி	-	சோலை, பற்றை

வினை மரபுச் சொற்கள்

அருவி	-	பாயும்	இடி	-	இடிக்கும்
மின்னல்	-	மின்னும்	கடல்	-	இரையும் /இமிழும்
வெயில்	-	எரிக்கும்/காயும்	தென்றல்	-	வீசும்
பனி	-	பெய்யும்	மழை	-	பெய்யும், பொழியும்
நிலா	-	வீசும்	வெடி	-	வெடிக்கும்/சத்தம்
மலர், பூ	-	மலரும், பூக்கும்	பொன்	-	மின்னும்
மணி	-	ஒலிக்கும், ஓசையிடும்.			

இருப்பிடங்கள்

அரசன்	-	அரண்மனை, கோட்டை, மாளிகை
அரசி	-	அந்தப்புரம்
அகதி	-	சத்திரம், மடம்
போர் வீரர்	-	பாசறை
சந்நியாசி	-	மடம்
குற்றவாளி	-	சிறை
காட்டு மிருகம்	-	குகை, காடு
வீட்டு மிருகம்	-	பண்ணை
பறவை	-	கூடு, பொந்து
பிராணிகள்	-	வளை, புற்று
நோயாளி	-	மருத்துவமனை
மீன்	-	நீர்நிலைகள். (கடல், குளம், ஆறு, கிணறு)
மக்கள்	-	வீடு, குடிசை, குடில், மாளிகை, கூடாரம், மச்சு வீடு.
தற்காலிக வசிப்பிடம்	-	விடுதி, சத்திரம்

வேறு சில மரபுச் சொற்கள்:

குதிரை, யானையின் மலம்	-	இலத்தி
மாடு, எருமையின் மலம்	-	சாணம்/சாணி
ஆட்டு மலம்	-	பிழுக்கை
கழுதை மலம் / நாய் மலம்	-	விட்டை
பறவைகளின் மலம்	-	எச்சம்
செடிகளின் வித்து	-	விதை (கத்தரி, மிளகாய் போன்றவை)
சிறு பயிர்களின் வித்து	-	மணி (நெல், கடுகு போன்றவை)
மரங்களின் வித்து	-	கொட்டை (மா, பலா போன்றவை)

உள்ளீட்டுப் பொருள்:

நெல், கோதுமை	-	அரிசி
அவரை, உழுந்து	-	பருப்பு
கற்றாழை	-	சோறு
பலாப்பழம்	-	சுளை
மாம்பழம்	-	சதை
மாதுளம் பழம்	-	முத்து

நிறுத்தற் குறிகள்

கால் புள்ளி	,	வினாக்குறி	?
அரைப் புள்ளி	;	கீறல்	—
முக்கால் புள்ளி	:	சிறு கீறல்	-
முற்றுப்புள்ளி	.	அடைப்புக் குறி	( )
மேற்கோள் ஆரம்பக் குறி	“	வியங்கோள், உணர்ச்சிக் குறி	!
மேற்கோள் முடிவுக்குறி	”	உடுக் குறி	*
புள்ளடி	x	இடைச் சொருகல் குறி	

ALL WTSF PUBLICATIONS CAN BE OBTAINED THROUGH THE FOLLOWING CONTACTS

United Kingdom

- **Sivakumaran Tamil School,**
  Selhurst Boys School,
  The Crescent Croydon. CR0 2HN
  Saturdays 10.00 - 4.30pm.
  Mob: 07958 408 280

- **TECA,** 72 Warlingham Road,
  Thornton Heath, Surrey. CR7 7DE
  Tel: 07958 408 280
  email:books@tamiled.co.uk :
  web:www.tamiled.co.uk

- **West London Tamil School,**
  Mr M.T.Selvarajah,
  75 Middleton Avenue, Greenford,
  Middx UB6 8BG
  Tel: 07901517531
  email:mtsrajah@tamiled.co.uk

- **Coventry Tamil Academy of Language and Culture,**
  Mr K.Ariyaratnam,
  1, Jackline Drive, Coventry CV3 6QG.
  Tel: 07801 723 538

- **Lewisham Tamil School,**
  (Based at London Sivan Kovil)
  Mr N Satchithananthan,
  Tel: 020 8690 0401.
  email:nsatchi@hotmail.com

- **Tamil Cultural Arts Centre**
  Mrs Viji Jeganathan
  61 Tintern Avenue
  Kingsbury, London. NW9 ORH
  Tel: 0208 2044600
  email: viji61@hotmail.com

- **Tamil Academy of Arts and Culture**
  (Saturdays 10.00 am. - 2.00 pm.)
  Sydenham School
  Dartmouth Road, London SE26 4 RD

- **Sutton Tamil School**
  58, Lavender Vale, Wallington SM6 9QT
  Tel: 07726 946 234

- **Hendon Tamil School,**
  Mr S.Sivakumar,
  77 Somervell Road, South Harrow,
  HA2 8TZ. Tel: 07740468051

- **Mr K Manoharan,**
  27 Hillcross Avenue,
  Modern, Surrey. SM4 4AT
  Tel: 020 8540 0705
  email:manoharan@tamiled.co.uk

- **Mrs Lily Rex Jeyarajan,**
  9 Woodland Way, Tolworth,
  Surrey. KT5 9QZ
  Tel: 020 8329 9005
  email:lilyj@tamiled.co.uk

- **Mr E K Rajagopal,**
  Puthinam, 38 Moffat Road, Tooting,
  London SW17 7EZ. Tel: 020 8767 8004

- **J R Print,** 61 Hoe Street, Walthamstow,
  London E17 4SA Tel: 020 8503 6643

- **ITR-London**
  Nambi Mahesan - Tel: 0208 177 0884

Germany

- **Mr Nadarajah Suseenthiran**
  Straube, Brunsbuetteler Damm 21,
  13581 Berlin, Germany
  Tel.: 0049 30 3318136
  email: cnsusee@yahoo.de

- **Mr V Sivarajah** (Editor Maan-Erde)
  Duisburg Germany. Tel: 0049 203 706 480

- **ITR-Germany**
  Najinai Vijayan. Tel: 0049 2013 307 524

- **Mr P Srijeevaghan**
  Kamen, Germany. Tel: 0049 230 729 9384

Australia

- **Mr L.Murugapathy,**
  Victoria, Australia.
  Tel: 0061 393 081484
  email: letchumananm@gmail.com

- **Mr N R Wickiramasingham**
  Dandenong - Victoria. Tel: 0061 404 059 231

Norway

- **Mr S Thiagalingam,**
  Oslo, Norway. Tel: 0047 21 697212

France

- **Arivaalayam,**
  7 Rue Perdonnet 75010 Paris, France.
  Tel: 0033 14 47 20 33 4.

- **Rajan Bookshop,**
  22 Rue Perdonnet, 75010 Paris, France.
  Tel: 0033 14 60 73 92 6.
  Mobile : 0033 66 42 04 69 1

- **Vannai Theivam,** Paris, France
  Tel: 0033 148 614 223

Denmark

- Mr K.S Thurai, Herning, Denmark.
  Tel : 0045 97 215 425

- **ITR -Denmark**
  Rajan. Tel: 0045 75 310 118

Canada

- **Murugan Book Depot,** Ellesmere Road,
  Toronto, Canada. Tel: 001 416 324 9640

- **Mrs Malini Velauthapillai,**
  Canada. Tel: 001 416 299 0700

- **Mr M C Francis**
  Ontario. Tel: 001 519 746 4269
  Email: marcilfrancis@yahoo.com

South Africa

- **Mr K Chinappan**
  Durban. Tel: 027 31 400 2587

தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள்

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

தமிழர் வாழும் நாடுகள்



1	அவுஸ்திரேலியா	9	நோர்வே	17	சிங்கப்பூர்
2	அமெரிக்கா (USA)	10	சுவீடன்	18	மலேசியா
3	தென்னாபிரிக்கா	11	நெதர்லாந்து	19	ஐக்கிய இராச்சியம்
4	பிரான்ஸ்	12	கனடா		
5	ஜேர்மனி	13	கயானா	20	இலங்கை
6	ஹவாய் தீவு	14	மொரீசியஸ்	21	அயர்லாந்து
7	சுவிற்சலாந்து	15	இத்தாலி	22	பீஜித் தீவுகள்
8	டென்மார்க்	16	இந்தியா	23	நியூசிலாந்து

UNIE ARTS (PVT) LTD., T.P.: +94 11 2330195